
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின் பரிபூரணானந்தம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

வேதாத்திரியப் பார்வையில்

தாயுமானவரின் பரிபூரணானந்தம்

அருள்நிதி. மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே.....

1. பேரின்ப நிஷ்டை அருள்வாய்.
2. பரிபாக காலம் எதுதெரியுமா?
3. அவனின் இயக்கம் அணுவாற்றல்
4. கர்மங்கள் போராடுதா? அகத்தவம் செய்வோம் வாரீர்!
5. ஜென்மம் வருமோ? பிறவிக்கடலை எளிதாக நீந்தலாமே!
6. கடவுள் யார்...? எங்கே உள்ளார்...!
7. வினைத்தூய்மை மனத்தூய்மை ஒன்றை ஒன்று உயர்த்தும்
8. மேலான நிலையைப் பற்றி நிற்க அருள் புரிவாயாக?
9. மனம் குவிய ஒரு தந்திரம்
10. ஆசைக்கோர் அளவில்லையா

“எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே

அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே”

இறைநிலையை – “பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற முழுமையான பேரின்பமே” என்கிறார் தாயுமானவர்.

இறைநிலை ஆனந்தமயமானது என்பதை பேரின்ப ஊற்று என்பார் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.

பரிபூரணானந்தம்” என்ற தலைப்பிலே தாயுமானவர் 10 பாடல்களை 160 வரிகளில் ஆனந்தமாகப் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும்

பார்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற

பரிபூர ணானந்தமே! (தா.பா.4)

என்று பாடி முடிக்கிறார் தாயுமானவர்.

“பார்க்கின்ற இடங்கள் தோறும் நீக்கமற நிறைந்து விளங்குகின்ற முழுமையான பேரின்பமே” என்று இறைநிலையை தாயுமானவர் போற்றுகிறார். அருட்தந்தை வேதாத்திரி மகரிசியோ.....

“பேரண்டப் பெருவெளியை நினைக்குந் தோறும்

பெருகிவரும் இன்பத்தை யான் என் சொல்வேன்” (ஞா.க.1419)

என்று பல இடங்களில் “பரம்பொருள் ஆனந்தமயமானது” என்று போற்றுகிறார் மகரிஷி. இனி தாயுமானவரின் இப்பாடல்களை வேதாத்திரியத்தோடு ஒப்பாய்வு செய்து சிந்திப்போம்.

பேரின்ப நிஷ்டை அருள்வாய்

ஒரு சாதகனின் ஆன்மீகப் பயணம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்காகவே பாடப்பெற்றது தாயுமானவரது பாடல்கள்.

மனிதனின் நிலைகளை ஐந்தாகப் பிரிக்கலாம்.

1. விஷயி அல்லது போகி
2. தர்ம அனுஷி
3. விவேகி
4. வைராக்கி.
5. ஞானி

போகி நிலையில் உலக இன்பத்தை மட்டும் அனுபவிப்பான். காமத்திற்கு மட்டும் முதலிடம் தருவான்.

தர்ம அனுஷி என்றால் தர்மத்தைப் பின்பற்றுபவன். தர்மப்படி பொருள் ஈட்டி இன்பத்தை அனுபவிப்பவன்.

மனிதனின் முன்றாவது நிலை விவேகி.. அதாவது போக நிலையிலும், தர்ம நிலையிலும் கடந்து விவேகத்தை அடைகிறான்.

உண்மைப் பொருளை உணர்கிறான். விளக்கம் கிடைத்தப்பின் பழைய பழக்கத்தை மாற்ற எண்ணுகிறான்.

இறுதியாக வைராக்கியாக மாறுகிறான். எப்படி? விவேகம் அடைந்த பின்பு, அதாவது அறிவு வந்து விட்டது. அந்த அறிவைப் பயன்படுத்த முடியவில்லையே என்று தாயுமானவர் பாடுவார்.

விளக்கம் கிடைத்தபின் பழக்கத்தை விட முடியாமல் சாதகன் திணறுகிறான். சாதகன் இந்த நிலையில் தான் அதிகம் காலம் செலவிடுவான்.

விவேகியாக இருந்து வைராக்கியாக மாறும் நிலையில்தான் சாதகன் அதிக காலத்தை செலவழிக்கிறான்.

“பழக்கத்திற்கும், கூர்ந்த விளக்கத்திற்கும் இடையே பாருகில் மனிதரெல்லாம் போராடுகின்றார்.” வேதாத்திரி மகரிஷி

பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் போராடுகிறான். வைராக்கியம் பெற தன்னை உணர முயற்சிக்கிறான்.

அறிவு வந்து விட்டது அந்த அறிவின்படி வாழ முடியாமல் தவிக்கிறான்.

இந்த நிலை அடைவதற்காகத் தான், ஞானிகள் தன்னை நிந்தனை செய்கிறார்கள்.

தாயுமானவருக்கும் ஞானப்பாதையில் செல்ல விளக்கம் கிடைத்துவிட்டது. ஆனால் பழக்கம் விடவில்லை என்று இப்பாடலில் வருந்துகிறார்

தாயுமானவர் மட்டுமல்ல. பட்டினத்தார், பத்திரகிரியார், அருணகிரிநாதர், மாணிக்கவாசகர் போன்ற ஞானிகளும் தன்னை நிந்திக்கின்றனர்.

வாசா கயிங்கரியம் அன்றிஒரு சாதனம்
மனோவாயு நிற்கும் வண்ணம்
வாலாயம் ஆகவும் பழகிய அறியேன் துறவு
மார்கத்தின் இச்சைபோல

நேசானு சாரியாய் விவகரிப் பேன் .அந்த
நினைவையும் மறந்தபோது
நித்திரை கொள்வேன். தேகம் நீங்கும் என எண்ணிலோ
நெஞ்சந் துடித்து அயருவேன்

பேசாத ஆனந்த நிஷ்டைக்கும் அறிவு இலாப்
பேதைக்கும் வெகுதூரமே.
பேய்க்குணம் அறிந்தி இந்த நாய்க்கும் ஒரு வழிபெரிய
பேரின்ப நிட்டை அருள்வாய்.

பாசா டவிக்குளே செல்லாதவர்க்கு அருள்
பழுத்து ஒழுகு தேவதருவே!
பார்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே! (தா.பா.4)

மனத்தையும் பிராணனையும் படிப்படியாகக் கட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்பது குறித்து வாயினால் மட்டும் பேசவேனே தவிர, அதற்குரிய முயற்சி எதையும் மேற்கொள்ளாதவன்.

துறவு நெறியில் விருப்பம் கொண்டு இருப்பவன் போல - கேட்பவர் தன்மைக்கேற்ப விவரித்துப் பேசுவேன். அந்த நினைவும் மறந்தபோது. உறங்கி விடுவேன்.

“இந்த உடம்பு ஒருநாள் நம்மைவிட்டு நீங்கிவிடும்” என்ற எண்ணம் வரும்போது மட்டும் துடிதுடித்துச் சோர்ந்து போவேன்.

பேசாத பேரின்ப தியானம் என்பது இந்த அறிவில்லாத பேதைக்கு எட்டா தூரத்தில் இருக்கும் ஒன்றே.

இந்த நாயின் பேய்க்குணத்தை அறிந்து, பெரிய பேரின்ப தியானம் கைகூட, ஒரு வழியைக் கூறி அருளுவாயாக என்று வேண்டுகிறார் தாயுமானவர்.

தாயுமானவருக்கு ஞானப்பாதையில் செல்ல விளக்கம் கிடைத்துவிட்டது. ஆனால் பழக்கம் விடவில்லை என்று இப்பாடலில் வருந்துகிறார், தாயுமானவரின் வருத்தத்திற்கு விடையாக வருகிறது வேதாத்திரியம்.

விழிப்புணர்வு பெற்று விளைவறிந்து செயல்படும் திறன் கிடைக்கப்பெற்றாலும், பழைய பழக்கத்தை விட முடியாமல் மனிதர்கள் போராடுகின்றனர்,

ஏனெனில் மனதின் போதிய வளமும், வலிமையும் இல்லாமைதான். மன வளமைக்கு தவமும், விழிப்புணர்வுக்கு தற்சோதனையும் பழக்கமானால், விழிப்புணர்வு பெற்ற பழக்கம், வழக்கத்திற்கு வரும்.

தவம், தற்சோனை இல்லாமல் வேறு வழி, வேறு மார்க்கம் இல்லை. நம் முன்னோர்கள் பல செயல் அனுபவங்களை முறையாக விளக்கம் தந்துள்ளனர். அதை வழக்கமாக அனுசரித்து நடந்து வந்தனர்.

ஆனால் நாளாக நாளாக விளக்கம் தெரிந்து கொள்ளாமல் பழக்கமாக செயல்படும் போது மனம் தடுமாறி தவிக்கின்றனர்.

நீண்ட நாட்களாகப் பழகிய பழக்கத்தை தவமும் தற்சோதனையும் முயற்சியும் இன்றி மாற்றிவிட இயலாது.

தீமை விளைவிக்கும் செயல்களையும் பயனற்ற செயல்களையும் பழக்கத்தின் காரணமாக மேற் கொண்டிருப்போமே யானால் முறையாகப் பயிற்சியும் முயற்சியும் செய்து மாற்றிக் கொள்வதே சாலச்சிறந்தது.

விளக்கம் வெறும் தகவலாக இருக்கும் வரையில் தடுமாறும். உறுதிப்படும் போதும், அதனை உணர்வாகப் பெறும் போதும் தான், அதுவாக மாறும். விளக்க வழியில் நிற்கும்.

எந்தெந்தப் புலன்கள் மூலமாக செயல்கள் செய்து அனுபோகம், அனுபவம் பெறுகிறோமோ அவையெல்லாம் அந்தந்த உறுப்புகளில் பதிவாகி திரும்பத் திரும்ப மீண்டும் அந்த எண்ணம்; நினைவு வரும் பொழுது அதே நினைவு, அதே காட்சி இவை மூலமாக எண்ணம் வந்து விடுகிறது.

எண்ணமும் செயலும் தேவையாகப், பழக்கமாக, சூழ்நிலைக் கவர்ச்சியாக மாறி அடிக்கடி மனிதனிடம் செயல்படுகின்றது. இது போன்றே நாம் பேசும் பேச்சுக்களும் பதிவாகின்றன.

நாவில் இயக்கப் பதிவாக, உடல் முழுவதும் ஒலியலை அதிர்வுப் பதிவாக, மூளையில் நினைவுப் பதிவாக, வித்தில் தரப்பதிவாக, பிரபஞ்ச உயிரிலும், பிற உயிர்களிலும் பிரதிபலிப்புப் பதிவாக அமைகின்றன.

இந்த விளக்கத்தைக் கொண்டு ஓர் எண்ணம், ஒரு செயல் எவ்வாறு பதிவு, பிரதிபலிப்பு, செயலால் இன்ப துன்ப விளைவுகள் என்ற நான்காக மாற்றம் பெறுகிறது என்பதை உணரலாம்.

இந்த உண்மையை உணர வேண்டும். இதற்குப் படிப்பு ஒன்றும் பயன்படாது. எந்த விஞ்ஞான கருவியும் கூட பயன்படாது.

நம்முடைய மனம், நம்முடைய வாழ்க்கை முறை, நம்முடைய இன்ப துன்ப உணர்வுகள், நம் சிந்தனை இதனைக் கொண்டு உட்கார்ந்து அதற்கு உரிய முறையில் ஆராய்ச்சி செய்து அவரவர்களே தெரிந்து கொள்ள வேண்டியது தான்.

நற்பழக்கம்

"பழக்கத்திற்கும் கூர்ந்த விளக்கத்திற்கும் இடையே
பாருலகில் மனிதரெல்லாம் போராடு கின்றார்.
பழக்கத்தில் வளர்ந்தமக்கள் மாற்றுவது கடினம்
பாலர்களின் நற்பழக்கம் பலன்விளைக்கும் எளிது." (ஞாக.பா. 634)

நல்லோர் தந்த பரிசு:

வாழ்வை வளப்படுத்தும்
வழக்க பழக்கங்கள் எனும்
ஒழுக்கங்கள் எல்லாம்
ஆழ்ந்த சிந்தனையாளர்

அன்பினால் உலகுக்கு
அளித்த பரிசு ஆகும்." (ஞாக.பா. 638)

சிறந்த பண்பாடு

பழக்கமென்றும், பழமையென்றும், பகுத்தறிவுக்கு ஒவ்வா
பல செயல்களையே மாற்றிப் பண்பாட்டை வளர்ப்போம்.
ஒழுக்கமது துன்பம்எழா அளவு முறையோடு
உணர்ச்சிகளைச் சீர்செய்து வாழும் முறையே யாகும்;
அழுக்காறு அவாவெகுளி ஆகாது போக்கி,
அன்பிரக்கம், தொண்டு தவம், அறிவின் விழிப்பேற்போம்.
பழுத்தறிவு முழுமைபெறும்! பரஉணர்வு கிட்டும்!
பற்றறிந்து புலனுணர்ந்து பண்புடனே வாழ்வோம்." (ஞாக.பா.1595)

பேரின்ப தியானம் கை கூட, தாயுமானவர் பிரார்த்தனை செய்கிறார்.
பேரின்ப தியானம் செய்ய பயிற்சி வழங்குகிறது – வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

வேதாத்திரி மகரிஷியின் மனவளக்கலை மன்றங்களில் கற்றுத் தரப்படும் குண்டலினி தியானத்தில்
முதலில் 10 மூச்சு பயிற்சி (பிராணாயாமம்) செய்து விட்டு,
அருட்காப்பு சொல்ல வேண்டும்.

அடுத்தாக – அஸ்வினி முத்திரை 10 முத்திரை போட்டு விட்டு, மூலபந்தம் செய்து, நினைவுகளால் உயிர் சக்தியை மூலாதாரத்தில் இருந்து, ஆக்கினைக்கு கொண்டு சென்று நினைவை அங்கே நிறுத்த வேண்டும்

ஆக்கினையையே கவனிக்கும் போது புருவ மத்தியில் மெல்லியதாக ஒரு சின்ன குறுகுறுப்பு ஏற்படும். அதையே உணர்ந்து கொண்டு (நினைத்து கொண்டு) இருக்க வேண்டும்

மெல்ல நமது எண்ணங்கள் விலகி நாம் நமது உடலை மறந்து விடுவோம் அல்லது நமக்கு உடல் இல்லாது போல் நாம் உணர தொடங்குவோம் (அந்த அனுபவமே தனி , அதை அனுபவித்தல்

மட்டுமே புரியும்)

இதே போல துரிய தவத்துக்கும், செய்ய வேண்டும்

துரியாதீத தவத்திற்கும் செய்ய வேண்டும்

தவத்தை முடிக்கும் போது சங்கல்பம் செய்து முடிக்க வேண்டும் (அப்போது நாம் சொல்லும் சங்கல்பம் நிச்சயம் நிறைவேறும்)

(பிராணயாமம்,அஸ்வினி முத்திரை ,மூலபந்தம், இந்த வார்த்தை எல்லாம் பொருள் புரியவில்லை என்றால் அருகில் உள்ள மனவளக்கலை மன்றத்தில் சேர்ந்து தியானம் முறையாக பயின்று ச வரவும்)

நிறைய பேர் செய்கிற தவறு என்னென்ன ---- ஒரு வாரம் மட்டும் அல்லது ஒரு மாசம் மட்டும் தொடர்ச்சியாக அல்லது எப்போதாவது ஒரு முறை தியானம் செய்துட்டு எனக்கு ஒன்னுமே தோணலை அல்லது தெரியலை அப்படின்னு அதை விட்டு ஒதுங்கி போயிடறாங்க அதுதான் பெரிய தவறே

ஒரு முறை ஆசிரியரால் ஏற்றி விடபட்ட குண்டலினி சக்தியானது திரும்ப திரும்ப மேல் நோக்கி செல்லவே பார்க்கும்

தினமும் ஆகினை தவம் மற்றும் துரிய தவம் செய்கிறமோ இல்லையோ, கண்டிப்பாக கட்டாயமாக சாந்தி தவம். ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை காலை மாலை இரு வேலைகளிலும் செய்யவேண்டும்

சாந்தி தவம் செய்தால் மட்டுமே நாம் ஆறு நாள் செய்த தவம் முழுமையடையும்.

இல்லாவிட்டால் நாம் செய்த தவ சக்தி எந்த வித பிரயோஜனமும் இல்லாமல் போய்விடும்

ஆக்கினை மற்றும் துரியத்தில் நாம் நம்முடைய உயிர் சக்தியை மனோ சக்தியாக மாற்றுகிறோம்.

சாந்தி தவத்தில் அந்த ஆறு நாள் பெற்ற மனோ சக்தியை நாம் நம்முடைய உடல் சக்தியாக மாற்றி நம்முடைய தவ பயனை நாம் அனுபவிக்கிறோம்.

நாள்தோறும் தவமியற்றி ஆனந்தமாக வாழ்வோமாக.

பரிபாக காலம் எது தெரியுமா?

மலபரிபாகம் காலம் எது தெரியுமா? இறைநிலையை உணர்ந்து கொண்ட காலம்தான் மலபரிபாகம்.

தாயுமானவர், தன்மீது இரக்கம் காட்டி, இதனை நீ அறிவிக்க வந்த காலம், மலபரிபாகம் நிகழும் காலம் அல்லவா? என்று இந்தப் பாடலில் பாடுகிறார் தாயுமானவர்.

“தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன
    செயல் கொண்டு இருப்பனமுதல்
  தேகங்கள் அத்தனையும் மோகம் கொள் பௌதிகம்
    ஜென்மித்த ஆங்கு இறக்கும்.

விரிவாய பூதங்கள் ஒன்றோடு ஒன் றாய் அழியும்
    மேற்கொண்ட சேஷம் அதுவே.
வெறுவெளி. நிராலம்பம். நிறைசூன்யம். உபசாந்த
    வேதவே தாந்தஞானம்.

பிரியாத பேரொளி பிறக்கின்ற அருள். அருள்
    பெற்றோர்கள் பெற்ற பெருமை.
  பிறவாமை, என்றைக்கும் இறவாமை யாய்வந்து
    பேசாமை யாகும், எனவே

பரிவாய் எனக்குநீ அறிவிக்க வந்ததே
    பரிபாக காலம் அலவோ?
பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
    பரிபூர ணானந்தமே.” (தபா.பா.5)

கண்ணால் காணுமாறு ஊர்வன, நடப்பன, பறப்பன, பல்வேறு வினைகளைச் செய்து இருப்பன முதலிய உடல்கொண்டு பிறந்த உயிர்கள் அனைத்தும், பஞ்ச பூதங்களால் ஆகிய உடல் கொண்டு பிறந்தது. அதனால், பின்னர் அவை இறக்கும்.

பூதங்களும் முறையே----- நிலம் நீரிலும், நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று ஆகாயத்திலும், ஆக ஒன்றில் ஒன்று மறையும்.

அதற்கு மேலும் எஞ்சி நிற்கும் பொருள் ஒன்று உண்டு. அதுதான் வெட்டவெளி. எதையும் பற்றி நில்லாதது. முழுப்பாழ்.

அருள் பிறக்க ஏதுவாய் விளங்கும் வேத வேதாந்தம் கூறும் மெய்ஞ்ஞானம்.

அம் மெய்ஞ்ஞானத்தால் பெற்ற பிரிப்பில்லாத பேரொளியாக விளங்கும் திருவருள்.

அவ்வருளைப் பெற்றவர்கள் பெற்ற பெருமை மீண்டும் உடல்கொண்டு பிறவாமை. அதுவும் என்றும் இறவாத தன்மை வந்து பொருந்த, பேசாமையே ஆகும்.

எனவே, என்மீது இரக்கம் காட்டி இதனை நீ அறிவிக்க வந்த காலம், மலபரிபாகம் நிகழும் காலம் அல்லவா? என்று பாடுகிறார் தாயுமானவர்.

மலபரிபாகம் காலம் எது தெரியுமா? இறைநிலையை உணர்ந்து கொண்ட காலம்தான் மலபரிபாகம். வேதாத்திரியம் – இறைநிலையை உணர்ந்து கொண்டது பற்றி விரிவாகவும் விளக்கமாகும் சொல்கிறது.

இறையுணர்வு பெறும் ஆற்றல் எல்லாருக்கும் உண்டு: தேவை அகத்தமும் அறவாழ்வும்.

"அறிவு ஒரு மறை பொருள். அதைக் கொண்டு தான் பேரியக்க மண்டலப் பொதுவான மறைபொருள் தெய்வ நிலையை உணர முடியும். எந்த இயக்கமானாலும் இருப்பு நிலையில்தான் மோதவேண்டும்.

அதில்தான் முடியவும் வேண்டும். இங்கே உணர்ந்து கொள்வது எது? அலையாக இயங்கி மோதுவதா?

அல்லது இருப்பாக இருந்து தாங்குவதா? இருப்புதான் உணர்கிறது. எல்லாத் தோற்றங்களிலுள்ள இயக்க அலையை எங்கும் நிறைவாயுள்ள நிலைபொருள் இருப்பு நிலை - இறைவெளிதான் உணர்வாகப் பெறுகிறது.

ஆகவே இறைவெளியான இருப்பு நிலை பேரறிவு - (Super Consciousness) எனவும் அகண்டாகாரமாக அது நிறைந்திருப்பதால் (Cosmic - consciousness) வாணறிவு எனவும் போற்றப்படுகிறது.

அறிவுதான் நான் என்னும் பொருளாக உள்ளது என்றும் அதுதான் இருப்பு நிலையாக தெய்வமாகவும் உள்ளது என்றும் உணரும் பெரும் பேறு மனிதனுக்குக் கிட்டிவிட்டால் அவன் தெய்வமாகவே திகழும் பெருமையுடையவனாகிறான்.

ஆதி முதல் அணுவரையில் அவனேயாகி அனைத்திலும் அவனே நிறைந்த பொருளாக இருப்பதால் அறிவே தான் நான் என்று உணர்ந்து அதுவே தெய்வமாகவும் இருக்கிறது என்ற பேரறிவில் அவன் எல்லாம் உணரும் ஆற்றல் பெற்றவனாகிறான். இதனை அறிவறிந்த பெரியார் 'வள்ளுவப்' பெருந்தகை

"ஐயப்படாது அகத்தது உணர்வானைத்

தெய்வத்தோ டொப்பக் கொளல்".

என்ற கவி மூலம் விளக்கியிருக்கிறார்.

இந்தப் பேரறிவில் விழிப்போடு இருப்பவர்களுக்கு எதைப் பற்றி நினைத்தாலும் அதிலிருந்து வரும் விளக்கம் இறைவனே பேசுவது போல இருக்கும்.

இந்த மனநிலையில்தான் முழுமையான அமைதி மனிதனுக்குக் கிட்டும். அறிவை அறியும் வரை அது குறையுடையதாகவே இருக்கும்.

அந்த நிலையில் பொருள், புகழ், அதிகாரம், புலனின்பம் என்ற நான்கில் தன்னை இணைத்துக் கொண்டு இன்னும் வேண்டும்,

இன்னும் வேண்டும் என்ற குறையுடையதாகவே, வறுமை மிஞ்சியதாகவே இருக்கும்.

அறிவையறியும் ஆற்றல் அனைவரிடமும் உண்டு. அதற்கு பயிற்சி வழி அகத்தவமும் (Simplified Kundalini Yoga), அறநெறி பற்றி வாழும் முறையும் ஆகும்.

அகத்தவமும் அற வாழ்வும்".

"மறைபொருளாம் அறிவு சிவம் இரண்டும் ஒன்றாய் நானாய்
மனிதன் தெய்வமாய்த் திகழும் மாபதம் பேறானால்
இறையுணர்வால் தன்முனைப்புப் பேரறிவாய் மாறும்
எப்போதும் ஈசன் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்;
குறையறிவில் பொருட்கள் புகழ் புலன் இன்பம் இவற்றில்
கொடிய வறுமை பெருகும். நிறைவு கிட்டா வாழ்வில்
நிறைநிலையை எவரெனினும் முயற்சித்தால் பெறலாம்
நேர்வழியோ அகத்தவமும் நிறையற வாழ்வாகும்". (ஞாக.பா.1671)

இருக்கிறது என்று சொன்னால் எடுத்துக் காட்ட முடியாது. எடுத்துக் காட்ட முடியாததால் இல்லை என்று மறுத்துக் சொல்லவும் முடியாதது மறைபொருள் எனப்படும்.

அறிவும்,தெய்வமும் மறைபொருட்கள் ஆகும். அறிவுதான் “நான்” என்னும் பொருளாக உள்ளது என்றும் அதுவேதான் இருப்பு நிலையான தெய்வமாகவும் உள்ளது என்று உணரும்பேறு மனிதனுக்கு கிட்டிவிட்டால் அவன் தெய்வமாகவே திகழும் பெருமையுடையவனாகிறான்.அதுவே இறையுணர்வு நிலையாகும்.

இறையுணர்வினால் மனிதனில் எழும் தன்முனைப்பானது பேரறிவாகவே மாறும். எப்போதும் இறைநிலையின் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்.

இந்தப் பேரறிவில் விழிப்போடு இருப்பவர்களுக்கு எதைப்பற்றி நினைத்தாலும் அதிலிருந்து வரும் விளக்கமானது இறைவனே பேசுவது போல இருக்கம்.

அறிவை அறியும்வரை அது குறைபாடுடையதாகவே இருக்கும். அந்த நிலையில் பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் என்ற நான்கில் தன்னை இணைத்துக் கொண்டு இன்னும் வேண்டும். மேலும் வேண்டும் என்ற குறையுடையதாகவே, வறுமை மிஞ்சியதாகவே இருக்கும்.

அறிவை அறிந்த முழுமை பெறுவதற்கான ஆற்றல் அனைவரிடமும் உள்ளது. முயற்சி செய்பவர்கள் அந்நிலையை எய்தலாம். அத்தகு, பயிற்சி வழி அகத்தவமும், அறநெறி சார்ந்து வாழும் முறையும் உதவியாகும்.

"இறைநிலையை உணர்ந்து கொண்டேன்
என் அறிவு அதுவாய்க் கண்டேன்
இருநிலை இருப்பியக்கம்
இணைந்து வான் காந்தமாக

மறைபொருளாய் ஆகாச
மாவெளி நிறைந்து ஆற்றும்
மனிதர்கள் சொல்கட் கேற்ப
மதிப்பு நேர்மையான

நிறைவுள விளை வளிக்கும்
நேர்மையும் விளங்கிப் போச்சு
நிலவுல கெங்கும் மக்கள்
நெறியுடன் வாழ்வதற்கு

முறைபலவாய் விரிந்து
முன்னேறும் தொழில் விஞ்ஞானத்தோடு
இறை நிலை அறம் விளக்கும்
என்தொண்டு வாழ்க்கைக் கல்வி." (ஞாக.பா.1714)

எனது உடலுக்குள் உயிர். அந்த உயிருக்குள் அறிவு. அந்த அறிவுதான் இறைநிலை என்று உணர்ந்து கொண்டேன்.

இறைநிலையனது இருப்பு நிலையாகவும் இயக்க நிலையாகவும் இரண்டு வகையிலும், அந்த இரண்டும் இணைந்த நிலையில் வான் காந்தமாகவும் உள்ளது.

மறைபொருளான ஈடு இணையற்ற மாபெரும் சுத்தவெளியாக பிரபஞ்சம் எனும் வான்வெளியில் நிறைந்து இயங்கிக் கொண்டுள்ளது.

இருப்பே இயக்கமாகவும் உள்ளது. இயக்கத்தின் காரணமாக விளைவு வெளிப்படுகிறது.

மனிதர்களின் சொல், செயல்களுக்கேற்ப சரியான முறையான விளைவை அளிக்கின்றது என்ற இறைநிலையின் நேர்மையையும் விளங்கிக் கொண்டேன்.

இன்றுள்ள தொழில் முறைகளில் முன்னேறி விரிவடைந்துள்ளது. நில உலகில் எங்குமே வாழ்கின்ற மக்கள் செயல் விளைவு நியதியாகிய இறைநீதியை உணர்ந்து நெறியுடன் முறையாக வாழவேண்டும்.

ஆகவே மக்கள் அகம் மற்றும் புறவாழ்க்கையில் கடைப்பிடித்திட வேண்டிய அறநெறிகளை விளங்கிக் கொள்வதற்கு, இறைநிலையை உணர்வதற்கு விஞ்ஞானம் இணைந்து மெய்ஞானத்தை வாழ்க்கைக் கல்வியாக விளக்குவதே, எனது தொண்டு ஆகும் என்கிறார் அருள்தந்தை வேதாத்திரி மகரிசி. நாமும் அகத்தவமும், அறநெறி சார்ந்து ஆனந்தமாக வாழ்வோமாக.

அவனின் இயக்கம் அணுவாற்றல்

அவனின்றி ஓர் அணுவும் அசையாது எனத் திருமூலர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடினார்.

இதற்குக் காரணம் அவர் அணுவின் அசைவை சிவனாகப் பார்த்தார். நாம் காலங் காலமாக வணங்கி வரும் நடராஜர் சிலையில் அணுவியல் துகள்கள் நகரும் அமைப்பின் சூட்சமம் அடங்கியுள்ளது.

ஓர் அணு என்பது புரோட்டொன், நியூட்ரோன் மற்றும் எலெக்ட்ரோன்களால் ஆனவை. புரோட்டோனும் நியூட்ரோனும் ஒன்றோடு ஒன்றாய் பிணைந்திருப்பதை நியூக்லியஸ் என்றழைப்பர்.

இந்த நியூக்லியஸை சுற்றி வரும் எலெக்ட்ரோன் சுழன்று ஒரு சுற்றுப்பாதையை உருவாக்குகிறது. இதுவே அணுநகர்வு. இந்த அணு நகர்வுதான் நடராஜர் சிலையின் வடிவம்.

"அணுவின் அணுவினை ஆதிப்பிரானை
அணுவின் அணுவினை ஆயிரங் கூறிட்டு
அணுவின் அணுவினை அணுகவல்லார்க்கு
அணுவின் அணுவினை அணுகலுமாமே" (திருமந்திரம்)

எனத் திருமூலர் பாடினார். ஆனால் இந்து சமயத்திற்கும் அறிவியல் கோட்பாடுகளுக்கும் இடையே பிணைக்கப்பட்டுள்ள ரகசியங்கள் வெறும் ரகசியமாய் இல்லாமல் வெளிச்சத்திற்கு வந்தால் மட்டுமே பல அர்த்தங்கள் புரியும், அறியாமை நீங்கும்! அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது பெரியோர் வாக்கு!

அது சரிதானே?

எவ்வாறு இந்த நிலவுலகம் தொடங்கி எல்லா உலகங்களிலும் நிகழும் செயல்களின் முடிவினைப் பார்க்கும்போது, எல்லாம் உமது செயல்

என்பது தெரியவரும் அல்லவா? என்று இறைநிலையின் செயலை வியக்கிறார் தாயுமானவர்.

“ஆராயும் வேளையில் பிரமாதி ஆனாலும்
ஐய! ஒரு செயலும் இல்லை
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ரர்
ஆம் என இருந்தபேரும்

நேராக வொருகோபம் ஒருவேளை வரஅந்த
நிறைவு ஒன்றும் இல்லாமலே
நெட்டுயிர்த் துத்தட்டு அழிந்து உளறு வார். வசன
நிர்வாகர் என்ற பேரும்

பூராய மாய் ஒன்று பேசும் இடம் ஒன்றைப்
புலம்புவார். சிவராத்திரிப்
போது துயி லோம் அன்ற விரதியரும் அறிதுயில்
போலே இருந்து துயில்வார்.

பாராதி தனில் உள்ள செயல் எலாம் முடிவிலே
பார்க்கில் நின் செயல் அல்லவோ?
பார்குமிட ம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.“ (தா.பா.6)

சொல் எங்கே? செயல் எங்கே? என்பார் வேதாத்திரி மகரிசி. எண்ணம், சொல், செயலில் தூய்மையாக இருப்பவர்கள் கூட சமயங்களில் பாதை மாறி விடுவது உலக இயல்பு. இதைத்தான் தாயுமானவர் இப்பாடலில் சொல்லுகிறார்.

ஐயனே! ஆராய்ந்து பார்க்கும் பொழுது, பிரம்மா முதலிய எவரும். உமது செயலன்றி, தமது செயல் என எதுவும் செய்வதில்லை.

பேசாத பெருநிலை உற்று மௌனமாய் இருக்கும் நற்குணம் உடையவரும், ஒரு கோபம் என வரும்போது, பெருமூச்சு விட்டு, நிலைகுலைந்து, தகாத சொற்களைக் கூறிவிடுவர்.

வாக்கு வன்மை உடையவர் எனப் பெயர் எடுத்தவரும், ஒரு பொருள் குறித்து முழுமையாகப் பேச முற்படும்போது, பொருந்தாத சில சொற்களை இடையில் சொல்லிக் குழப்பிவிடுவர்.

சிவராத்திரி நாளில் தூங்கமாட்டோம் என விரதம் மேற்கொண்டவரும், இடையில் அறிதுயில் கொண்டவர் போல சிறிதே உறங்கிவிடுவர்.

இந்நிலவுலகம் தொடங்கி எல்லா உலகங்களிலும் நிகழும் செயல்களின் முடிவினைப் பார்க்கும்போது, எல்லாம் உமது செயல் என்பது தெரியவரும் அல்லவா?

எல்லாம் வல்ல இறைவெளியின் சுத்தவெளியின் தன்மை என்ன என்பது பற்றி வேதாத்திரியம் துல்லியமாக எளிமையாக விளக்கி இருக்கிறது. எப்படி?

தெய்வம் அல்லது இறைநிலை என்றால் என்ன?

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்னும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம் என்பது வேதாத்திரியக் கோட்பாடாகும்.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம்

இறையுணர்வு பெற்றவர்கள் இதுவரையில் தெளிவாக மொழி வழியிலும், பயிற்சி வழியிலும் கொடுத்துள்ள உண்மை விளக்கம் என்னவென்றால்,சுத்தவெளியாகிய இறைநிலையே முடிவான அருட்பேராற்றலான தெய்வமாகும் என்பதாகும்.

சுத்தவெளியானது (1) வற்றாயிருப்பு, (2)பேராற்றல், (3)பேரறிவு, (4)காலம் என்கின்ற நான்கு வளங்களை உடையதாக இருக்கிறது.

வற்றாயிருப்பு

சுத்தவெளியாகிய பெருவெளியில் இருந்து அணு முதலாக அண்டங்கள் மற்றும் உயிரினங்கள் எவ்வளவு தோன்றினாலும் சுத்தவெளியோ, அதனுடைய ஆற்றலோ எந்த அளவிலும் குறைவுபடாது. இந்த உண்மையை விளக்குகின்ற வார்த்தைதான் வற்றாயிருப்பு ஆகும்

பேராற்றல்

பலகோடி சூரியக் குடும்பங்களை உடைய இந்த பேரியக்க மண்டலத்தில் உலவுகின்ற அனைத்தையும் இதே சுத்தவெளிதான் தாங்கிக் கொண்டு இருக்கிறது. இதனால் சுத்தவெளியை பேராற்றல் என்று கூறுகிறோம்.

பேரறிவு

எந்தப் பொருளிலும், எந்த இயக்கத்திலும் இதே சுத்தவெளிதான் ஊடுருவி நிறைந்து ஒழுங்காற்றலாக, செயல் புரிந்து வருகிறது.

இந்த ஒழுங்காற்றல்தான் அறிவு என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு தோற்றத்திலும், உருவ அமைப்பு,குணங்கள் மற்றும் காலத்தால் காலம் என்ற அதிர்வால் ஏற்படக்கூடிய மாற்றங்கள் அனைத்தும் நிகழ்கின்றன. இதனால் சுத்தவெளியானது பேரறிவு என்று விளக்கப்படுகிறது.

காலம்

சுத்தவெளியானது தன்னிறுக்க அழுத்தமாக உள்ளதால், அது தன்னைத்தானே விட்டுவிட்டு அழுத்தும்போது, அதுவே நுண்ணதிர்வாகச் செயல்புரிகிறது.

இந்த நுண்ணதிர்வு என்ற காலத்தின் நுண்ணிய அலகானது கண்சிமிட்டும் நேரம்போல மிகக் குறைவானதாகும்.

இந்த அதிர்வு இறைநிலையில் அடங்கி இருப்பதனால் எல்லாப் பொருள்களுக்கும் தோற்றம், வளர்ச்சி, முடிவு என்ற செயல்கள் உண்டாகின்றன. இதனால் இறையாற்றலை காலம் என்று சொல்கிறோம்.

ஆகவே இறையாற்றல் என்ற பெருவெளி வற்றாயிருப்பாக இருக்கிறது. பேராற்றலாக இருக்கிறது. பேரறிவாக இருக்கிறது. அதுவே காலமாகவும் இருக்கிறது.

இறைநிலை என்ற தெய்வம்

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும்
வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இந்நான்கும் விண்முதல் ஐம்பூதங்கள்
வான்கோள்கள், உலகம், உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம்
வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே பரிணாமம்
வந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில்
வழுவாத செயல்விளைவு நீதியே கூர்தலறம் உண்மை,உண்மை”
(ஞாக.1666)

மனிதனால் செய்ய முடியாததையெல்லாம் செய்யக்கூடிய மாபெரும் ஆற்றல் பிரபஞ்சத்தையே இயக்குகிறது. மனிதனிலிருந்தும் இயங்குகிறது.

ஒரு சிறு விந்துவில் ஒர் அணுவை சிசுவாக்கி, அது வளரும் வரை பனிக்குடம் ஏற்படுத்தி, மனிதனை உருவாக்கும் வரை- அண்டங்களையும் கோள்கைளையும் துல்லியமாக இயக்கி வரும் தெய்வம் என்ற சுத்தவெளியைத்தான் “எல்லாம் வல்ல தெய்வமது” என்றார் மகரிசி.

எல்லாம் சுத்தவெளி என்ற தெய்வத்தின் செயல் என்பதை எட்டு வரிகளில் வேதாத்திரியம் சொல்லியிருக்கிறது.

அது என்ற சுத்தவெளி அங்கு, இங்கு என்று இல்லாமல் எல்லா இடங்களிலும், எல்லாப் பொருட்களிலும், எல்லா இயக்கங்களிலும், எல்லா விளைவுகளிலும் குறைவில்லாமல் நீக்கமற நிறைந்துள்ளது

கல்லார் கற்றார் செயல்விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.

வலுவான நம் உடலை இயக்குவதும், உயிராக இயங்குவதும், அறிவாக உணர்வதும் அதே தெய்வம் என்ற சுத்தவெளியில்தான் என்பதை உணரலாம்.

இயக்குவது அறிவு, இயங்குவது உயிர், உணர்வது மனம். இவையெல்லாம் எல்லைகட்டிய உடலுக்குள் இருப்பவை.

இவற்றையெல்லாம் கற்றவர்களாயிருந்தாலும், கற்காதவர்களாக இருந்தாலும், அவர்களின் செயல்பாடுகளில் மலரும் விளைவு இன்பம் அல்லது துன்பம் என்பது தெய்வ நீதியாகும்.

மனிதன் தன்னை மாற்றிக் கொள்கிற பக்குவத்தின் அடையாளமே ஆறாவது அறிவு.

தன்னைத்தானே மாற்றிக் கொள்கிற அதிகாரத்தை மனிதனில் அமைத்தது சுத்தவெளியின் பேரறிவுதான்.

அமைத்த அதிகாரத்தை சுத்தவெளியின் பேரறிவு ஒரு போதும் அகற்றாது.

ஆனால், தனக்குள் அமைந்துள்ள ஏதேச்சை அதிகாரத்தை, ஒருவர் தவறாகப் பயன்படுத்தினால், அதற்கான துன்ப விளைவை அவர் எதிர்கொள்ள வேண்டும்.

அவனில்தான்நீ, உன்னில் அவன்-அவன் யார்? நீயார்? பிரிவேது?

பிரபஞ்சம் முழுவதும் இருப்பாக உள்ள தெய்வம் என்ற சுத்தவெளி, தன் ஆற்றலால் இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற இயல்பூக்கமாகிய அறிவால் அணுக்களாகி அவைகள் கூடிய கொத்தியக்கம்தான் சடப் பொருள்களாகவும் ஜீவன்களுமாகத் தன்நிலையில் மாற்றம் பெற்றுள்ளது.

எனவே, உனக்குள்ளாக தெய்வமும், தெய்வத்திற்குள்ளாக நீயும் இருப்பதை உணரும்போது, தெய்வமும் நீயும் பிரிவற்ற நிலையில் ஒன்றாகிவிட முடியும்.

“அவன் யார்? நீயார்? பிரிவேது”

என்றும்

“அவனின் இயக்கம் அணுவாற்றல்,

அணுவின் கூட்டுப் பக்குவம் நீ”

என்ற வரிகள் வாயிலாகவும்,

பழுத்த நிலை வரும் வரையில் நீ, நான் என்போம்

பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்”

என்ற வரிகள் வாயிலாகவும் அணுமுதல் அனைத்தும் சுத்தவெளியின் நிலைகள் என்பதையும் அனைத்தும் சுத்தவெளியின் செயல்களே என்பதையும் உணரலாம்.

"எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்

வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவும் அவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான் நீ உன்னில்அவன்
அவன் யார்? நீயார்? பிரிவேது?

அவனை மறந்தால் நீ சிறியோன்
அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்
அறிவு முழுமை அது முக்தி. "

உமது செயலன்றி, தமது செயல் என எதுவும் செய்வதில்லை என்பதை உணர்ந்த தாயுமானவர், திருமூலர் வழியில் "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்ற தத்துவத்தை மானுடத்திற்கு சொல்லியுள்ளார்.

அந்த தத்துவத்தை மகிவும் எளிமைப்படுத்தினார் நமது அருள்தந்தை வேதாத்திரி மகரிசி. எனவே சுத்தவெளியே அனைத்து செயலாக இருப்பதை உணர்ந்து. நாமும் அந்த சுத்தவெளியோடு இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காத நினைவில் ஆனந்தமாக வாழ்வோமாக.

கர்மங்கள் போராடுதா? அகத்தவம் செய்வோம் வாரீர்!

வேதாந்தத்தில் மாயை என்றொரு வார்த்தையை அடிக்கடி சொல்வதுண்டு. மாயை என்றால் என்ன? மயக்கம் என்று சாதாரணமாகப் பொருள் கொள்ளலாம். உள்ளதை சாதாரணமாகத் தெரிந்து கொள்ளாத கற்பனையிலேயே இருப்பது மாயை.

பிறப்பு, இறப்பு நடுவே இவ்வுலக வாழ்வு. இதை பிறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை.

கற்பனை வேகத்தால் இயற்கையை மறந்து, சமூகத்தின் அமைப்பையும், மக்களின் எண்ணம், செயல்களால் விளைந்து வரும், விளையப் போகும் நிகழச்சிகளையும் மறந்த, உடலளவில் தேவையையும், அறிவுக்கு அந்த சமயப் பொருத்தத்தையும் ஞாபகத்தில் கொண்டு, புலனறிவின் எல்லையிலேயே மட்டும் விரிந்து, மயக்க நிலையில் எண்ணிச் செயலாற்றுவது மாயை என்பதாகும்.

தன்னிலை விளக்கம் அறிந்த, தானே தன்னை விடுவித்துக் கொள்ள முடியாத மயக்க நிலையை, மாயை என்று சொல்லுகிறோம்.

செய்ததையே மீண்டும் மீண்டும் செய்து கொண்டு விளக்கம் இல்லாமல் அந்த இருட்டிலேயே மனிதன் நடக்கிறபோது - நல்லது கெட்டது தெரியாமல் மேலும் மேலும் அவன் துன்பத்திற்கு ஆளாகும் நிலையை “மயக்கம்” “மாயை” என்று சொல்கின்றார்கள்.

மாயை வென்று அகப்பற்றுகளை விட்டு, துரியத்தில் நின்று, பொய்ப் பொருள்களை நிராகரித்து தியானிக்கும் போது பழைய வினைகள் வந்தாலும் அதனை வென்று இறையுணர்வு பெற வேண்டும் என்பதை இப்பாடலில் தாயுமானவர் சொல்லுகிறார்.

"அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே
அம்மாயை இல்லாமையே
ஆம்எனவும் அறிவும் உண் டு. அப்பாலும் அறிகின்ற
அறிவினனை யறிந்துபார்க்கின்

எண்திசை விளக்கும் ஒரு தெய்வஅரு ளல்லாமல்
இல்லைஎனும் நினைவும் உண்டு. இங்(கு)
யான் எனது அறந்துரிய நிறைவு ஆகி நிற்பதே
இன்பமெனும் அன்பும்உண்டு

கண்டன எலாம்அல்ல என்று கண் டனை செய்து
கருவிகர ணங்கள் ஓயக்
கண்மூடி ஒருகணம் இருக்க என் றால் பாழ்த்த
கர்மங்கள் போராடுதே!

பண்டை உள கர்மமே கர்த்தா எனும் பெயர்ப்
பக்ஷம் நான் இச்சிப்பனோ?
பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே." (தா.பா.7)

இந்த அண்டமும் பேரண்டமும் மாயையின் காரியமே. அந்த மாயை என்பது பொய்யை மெய்யாகக் காட்டுவது என அறிய, ஓர் அறிவும் தோன்றுகிறது.

அதற்கு மேலும் அந்த அறிவு கொண்டு ஆராய்ந்து பார்க்குமிடத்து, எட்டு திசைகளையும் விளக்கமுறச் செய்யும் ஒரு தெய்வத்தின் திருவருள் அன்றி வேறு ஒன்று இல்லை என்ற நினைவும் உண்டாகியது.

இவ்விடத்தில் யான் எனது என்னும் அகப்புறப் பற்றுக்களை விட்டு துரியத்தில் நிற்பதே இன்பம் என்று உணரும் ஓர் அன்பும் தோன்றுகிறது.

ஐம்பொறிகளுக்குப் புலப்படும் அனைத்தும் பொய்ப் பொருள்களே என நிராகரித்து. புறக்கருவிகளும் அந்தக் கரணங்களும் அடங்க வேண்டும்

என்று, கண்மூடி ஒரு கணம் தியானிக்கலாம் என்றால், வீணான பழைய வினைகள் வந்து, போராடுகின்றனவே,

வினையே அதன் பயனை ஊட்டும் கருத்தா என்னும் கொள்கையை நான் விரும்பி ஏற்பேனோ? ஏற்கமாட்டேன் என்பதை, தாயுமானவர் இங்கு மறைமுகமாகச் சொல்லுகிறார்.

அகத்தவத்தால் அளப்பறிய பயன்களை பெறலாம். மாயையை வெல்லலாம், வினைகளை களையலாம். அகப்பற்றுகளை விடலாம், பொய்ப் பொருள்களை நிராகரிக்கலாம் என்பது வேதாத்திரியம்.

“அறிவதனை கருவினிலே இணைத்து தவம் ஆற்ற

ஐம்புலன்கள்அமைதி பெறும். அறுகுணமும் சீராம்.

அறிவுதன் விழிப்புநிலை பிறழாத தெளிவில்,

ஐந்துபெரும் பழிச்செயல்கள் விளைய வழியேது?

அறிவு உயிரில் அடங்கி அந்நிலையில் மேலும்,

ஆழ்ந்து ஒடுங்கித் துரியம் நிற்க முன்பின்வினைகள் போமே.

அறிவு துரியாதீத நிலை நிற்க நிற்க,

ஆதியாம், மெய்பொருளாம், அறும்பிறவித் தொடரே” (ஞாக.பா.1580)

அறிவை உயிரில் இணைத்து. குண்டலினித் தவம் இயற்றினால், இது வரையில் ஐம்புலன்கள் வழியே இயங்கிக் கொண்டிருந்த அறிவானது அமைதியடைகிறது.

அதனால் தோல், காது, கண், நாக்கு, மூக்கு என்னும் ஞானக் கருவிகள் அமைதியடைகின்றன.

அதனால் பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற ஆறு துர்குணங்களும் சீரமைக்கப்பட்டு, நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்புநெறி, மன்னித்தல் என்ற நற்குணங்களாக வெளிப்படும்.

எனவே பொய், கொலை, களவு, சூது, கற்பழிப்பு ஆகிய ஐந்து பெரும் பழிச்செயல்கள் விளைவதற்கு வழியில்லை.

அறிவானது உயிரில் அடக்கம் பெறும் இடம் துரியம் என்னும் சகஸ்ராதாரம்.

மேலும் மனம் ஒடுங்கியிருக்கும் நிலையில் அறிவானது செயல்படும்போது, முன்வினைகள் எனப்படும் சஞ்சித பிராரப்த கா்ம வினைகளின் பாவப்பதிவுகள் நீங்கிவிடும்.

துரியத்தில் மனதின் அலைச்சுழல் வேகம் குறைந்து, அறிவானது நுண்மையடையும்போது, விரியும் தன்மை கூடுதலாகி இயங்கும் பிரபஞ்சம், இயக்கத்திற்கு எல்லாம் மூலமான ஆதியாக உள்ள மெய்ப்பொருளில் லயமாகும்போது, பிறவித்தளை அறுபடுகிறது. மரணமிலாப் பெருவாழ்விற்கு வழியாகிறது.

ஆகவே, ஆக்கினை தவத்தால் இனிப் பழிபுரியாத இயல்பும், துரிய தவத்தால் முன்வினைப் பதிவு நீக்கமும், துரியாதீத தவத்தால் பிறவித்தளை அறுபடுதலும் பயனாக கிட்டுகிறது என்பது வேதாத்திரியம்.

அகத்தவப் பயன்களை உணர்ந்து நாள்தோறும் அகத்தவமியற்றி ஆனந்தமாக வாழ்வோமாக. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!

ஜென்மம் வருமோ?

'பிறவியின் நோக்கம் பிறவாமையை எய்துவது ஒன்றே' என்பது இந்து தர்மத்தின் சாரம். உலகியல் சார்ந்த நோக்கங்கள் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் வெவ்வேறாக இருப்பினும், முக்தி நிலையை அடையும் ஆன்மீக நோக்கமானது அனைவருக்கும் பொதுவான ஒன்று.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" **(குறள் 10)**

இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது என்பது வள்ளுவம்.

மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே - நாதா
இருப்பையூர் வாழ் சிவனே இன்னம்ஓர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா!!! (பட்டினத்தார் பாடல்)

இது வரையில் எண்ணற்ற பிறவிகளில், அடியேனை ஈன்ற அன்னையரும் உடலால் வருத்தமுற்று சோர்ந்தனர்; கர்ம வினையில் உழன்று அடியேனின் கால்களும் சலிப்புற்றன; மேலும் அடியேனின் தலையில் விதியை மீண்டும் மீண்டும் எழுதிய தன்மையால் பிரமனின் கைகளும் சலிப்புற்றுத் தளர்ந்து விட்டன.

'இருப்பையூர்' தலத்தில் கோயில் கொண்டருளும் சிவபெருமானே 'இனியும் ஒரு அன்னையின் கருப்பை வாசம் வாராது காத்தருள்வாய்' என்று பிறவிப் பிணிக்கு பெரிதும் அஞ்சிப் பாடுகிறார் பட்டினத்தார்.

மும்மலங்களும் மீண்டும் மீண்டும் வந்து பற்றிகொள்வதால் மீண்டும் பிறப்பு வருமோ? என்று தாயுமானவரும் கலங்குகிறார்.

சந்தமும் எனதுசெயல் நினதுசெயல். யான்னும்
தன்மை நினை அன்றி இல்லாத்
தன்மையால் வேறு அலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவம் இதுவே.

இந்தநிலை தெளிய நான் நெக்குருகிவாடிய
இயற்கைதிரு உளம் அறியுமே
இன் நிலையிலே சற்று இருக்க என் றால் மடமை
ஹிதசத்ரு வாகவந்து

சிந்தைகுடி கொள்ளுதே. மலமாயை கன்மம்
திரும்புமோ? தொடு வழக்காய்ச்
ஜென்மம் வருமோ? எனவும் யோசிக்குதே மனது.
சிரத்தைஎனும் வாளும்உதவிப்.

பந்தமற மெய்ஞ்ஞான தீரமும் தந்து, எனைப்
பாதுகாத்து அருள் செய்குவாய்.
பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே." (தா.பா.8)

- எப்பொழுதும் என்னுடைய செயல், நின்னுடைய செயல் என்றும்.
- யான் என்று சொல்லும் தன்மை நின்னை அல்லாத வேற தன்மை அல்ல என்றும்.
- காணும் இதுவே, வேதாந்தத்துக்கும் சித்தாந்ததுக்கும் பொதுத்தன்மை காணும் இடமாகும்.

இந்த நிலையை யான் அறிந்துகொள்ள, அடியேன் நெகிழ்ந்து உருகி வாட்டமுற்ற தன்மையைத் தேவரீரது திருவுள்ளம் அறிந்திருக்குமே!

இந்நிலையில் சற்றே நிலைத்து நில் என்று சொன்னால், அறியாமையானது நன்மை செய்வதுபோல் காட்டிக் கொள்ளும். பகைவர் போல வந்து எண்ணத்தில் குடியேறி விடுகிறதே!

இதனால் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களும் மீண்டும் வந்து பற்றி நிற்குமோ?

அதன் அடிப்படையில் மீண்டும் பிறப்பு வருமோ?

என்றெல்லாம் மனம் பலவாறாய் யோசனை செய்கிறதே!

ஊக்கம் என்ற வாளின் உதவியால். பாசம் அறுபடுமாறு செய்து, மெய்ஞ்ஞான வலியைத் தந்து, என்னைப் பாதுகாத்து, எனக்கு அருளும் செய்வாயாக – என்று வேண்டுகிறார் தாயுமானவர்.

பிறவிக் கடல் என்ன சொல்கிறது? வேதாத்திரியம்.......

"தன்முனைப்பு, பழிச்செயல்கள் பதிவு, மாயை

தளைமூன்றும் மனிதஉயிர்க் களங்க மாகும்.

வன்முறையில் இவை அறிவைப் புலன்கள் மூலம்

வழுக்கிப் பிறவிக் கடலை நீள வைக்கும்.

உன்வயமாம் அகத்தவத்தால், அகத்தா ராய்வால்,

உண்மையுணர்ந்து அறுகுணத்தைச் சீரமைத்து,

இன்முறையில் உயிர்கட்குத் தொண்டு ஆற்றி,

இறைநிலையில் உனை இணைக்கத் தூய்மை உண்டாம்." (ஞாக.பா.1594)

"தான்" என்று தனது உடலையே கருதிக் கொண்டதால், மனிதனிடம் அதிகாரப்பற்று ஏற்பட்டு விட்டது.

உடலைச் சார்ந்த சேர்ந்த பொருட்களிடம் பற்றும் மக்களிடம் பாசமும் ஏற்பட்டுவிட்டது. அதனால் இறைநிலையின் ஒரு பகுதியாகத் தானும் இருப்பதை மறந்துவிட்ட நிலை தன்முனைப்பு ஆகும்.

அதனால் பொய், கொலை, களவு, சூது. கற்பழிப்பு ஆகிய பழிச்செயல்கள் பழக்கப் பதிவுகளாகி விட்டது. உண்மைக்கு மாறான மனநிலை, மாயை அல்லது மயக்கம் ஆகும்.

இந்த மூன்று விலங்குகள் அறிவைத் தடை ஆக்கியுள்ளதால், மனிதனின் ஆன்மாவில், அறிவில் களங்கத்தை ஏற்படுத்திவிட்டது.

இந்த மூன்று களங்கங்களும் அறிவைப் புலன்கள் மூலமாக வன்முறையில் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இயக்கிப் பிறவிப் பெருங்கடலை நீளவைக்கிகது.

பிறவித்தளை அறுபட முடியாமல் மீண்டும் மீண்டும் மனிதன் பிறந்து பிறந்து இறக்கிறான்.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்பதை, தனது சுயம் தெய்வீகம் என்பதை உணர்ந்து, தன்முனைப்பை ஒழித்து இறைமுனைப்பை மலர்த்தினால் பிறவித்தளை அறுபடும்.

அறிவின் கட்டுப்பாட்டில் உடலையும் மனதையும் கொண்டு வருவதற்கான தன்வயமாகும்.

மனப்பயிற்சியாகிய அகத்தவம் இயற்ற வேண்டும். உண்மைகளை உணர்வதற்கு அகத்தை ஆய்வுசெய்து ஆறு துர்குணங்களை ஒழித்து நற்குணங்களாக சீரமைத்து, உடன் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்து, இறைநிலையில் உன்னை இணைத்துக் கொண்டால் களங்கம் நீங்கி தூய்மை உண்டாகும். பிறவித்தளை அறுபடும்.

பிறவிக்கடலை எளிதாக நீந்த வழிகாட்டுகிறது வேதாத்திரியம். எப்படி?

“பல ஆயிரம் பிறவி எடுத்தேற்றப் பாவப்

பதிவுகளை, ஒரு பிறவிக் காலத்துள் மாற்றி,

நலமடைந்து மனிதனாகித் தெய்வமாகி உய்ய,

நல்லவாய்ப்பு ஆற்றல் இவை நமக்களித்து, இயற்கை

நிலஉலகில் மனிதரிடம் அமைந்துளன, உண்மை.

நேர்முகமாய் கருமைத் தூய்மை உணர்ந்தாற்றிப்

பலனடைய அகத்தவத்தால் பரமுணர்ந்து, அறத்தின்

பாதையிலே ஒத்துதவி வாழும்முறை போதும்" (ஞாக.பா.1743)

என்னிலடங்காத பிறவிகளைத் தாண்டி வந்துள்ளது மனிதகுலம். உடல், உயிர், மனம், அறிவு, தெய்வம் என்பதைப் பற்றி அறியாமலும், உணராமலும் பழக்கத்தின் வழியே வாழ்ந்து வருகிறது மானுடம்.



உடலில் நோய்கள், மனதிலே களங்கம் ஆகியவை வாழ்க்கையில் சிக்கல்களாக துன்ப விளைவுகளை வெளிப்படுத்துகின்றன. அவை அனைத்தும் பாவப் பதிவுகளின் வெளிப்பாடு ஆகும்.

எத்தனையோ பிறவிகளில் வாழத் தெரியாமல் வாழ்ந்து பெற்ற பாவப்பதிவுகளை, மனிதன் முயன்றால் ஒரே பிறவியில் மாற்றி அமைதது்க் கொள்ள முடியும்.

வாழ்க்கை நலன்களை அடைந்து, வித்தின் மூலமாக வெளிப்படும் விலங்குநிலைப் பண்புகளை விடுத்து மனிதனாகலாம். அதற்கும் மேல் மாமனித நிலையில் தெய்வமும் ஆகலாம்.

ஆறாவது அறிவு என்ற சிந்தனை செய்யும் நல்ல வாய்ப்பையும், ஆற்றலையும் இயற்கையானது நில உலக மக்களாகி நமக்கு அளித்துள்ளது என்ற உண்மையை உணர வேண்டும்.

களங்கப்பட்டுள்ள கருமையப் பதிவுகளை உணர்ந்து கொள்ள வேண்டும். நேர்மையான வழியில் தூய்மை செய்து கொள்வதற்கு அகத்தவம் இயற்றி, இறைநிலையை உணர்ந்து கொள்ளலாம்.

அறநெறி வழியே, ஒத்தும் உதவியும் வாழும் முறையே போதுமானது ஆகும். இறையுணர்வும் அறநெறியும் கருமையத்தைத் தூய்மைப்படுத்தி, பிறவிக்கடலை நீந்தி கரைசேர்வதற்கு உதவி செய்யும்.

வேதாத்திரிய வழியில் நாமும் பிறவிக்கடலை கடந்து ஆனந்த வாழ்க்கை வாழ்வோமாக. ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!

கடவுள் யார்…? எங்கே உள்ளார்…!

கடவுள் என்பது என்ன என்று அறியாமல் புரியாமல் உணராமல் இருக்கும் தன் நிலைமையை, தாயுமானவர் இந்தப்பாடலில் புலம்புகிறார். தாயுமானவர் தனக்காகப் புலம்பவில்லை. மானுடத்திற்காக புலம்புகிறார்.

உண்மையில் கடவுள் யார் ......? எங்கே உள்ளார்.....!
ஏன் நமக்கு இந்த கலக்கம்......?

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே” (திருமந்திரம்)

திருமந்திரம் கூறும் சத்தியம் இதுவே! தமிழ் மறையான இதுவே நாம் அறிந்து கொள்ள வேண்டிய மிகப்பெரிய உண்மை ஞானம்! இறை இரகசியம்!

நம் உடலாகிய கோயிலில் உயிராக தானே வீற்றிருக்கிறான் எல்லாம் வல்ல இறைவன்! இறைவன் பெருஞ் ஜோதியானவன் எங்கும் நிறைந்தவன்!

இறைவனே ஜீவனாக சிறு ஜோதியாக நம் உடலில் உறைந்துள்ளான்! என்ன விந்தை இது?! அவனே படைத்து, காத்து, அழித்து, எதற்கு இந்த நாடகம்?! ஏனிந்த திருவிளையாடல்!

“பூதலயம் ஆகின்ற மாயை முத ல் என்பர்சிலர்.
பொறிபுலன் அடங்கும் இடமே
பொருள் என்பர் சிலர். கரண முடிவென்பர் சிலர். குணம்
போனஇடம் என்பர் சிலபேர்.

நாதவடிவு என்பர்சிலர். விந்துமய ம் என்பர் சிலர்.
நட்டநடுவே இருந்த

நாம் என்பர் சிலர். உருவும் ஆம்என்பர் சிலர். கருதி
நாடில்அரு என்பர் சிலபேர்.

பேதம் அற உயிர்கெட்ட நிலையம் என்றிடுவர் சிலர்.
பேசில்அருள் என்பர் சிலபேர்.
பின்னும்முன் னும் கெட்டசூனியமது என்பர்சிலர்.
பிறவுமே மொழிவர்இவையால்

பாதரச மாய் மனது சஞ்சலப் படும் அலால்
பரமசுக நிட்டை பெறுமோ?
பார்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே" (தா.பா.9)

- முதற்பொருள் என்ற கடவுள் என்பது ஐம்பூதங்களும் ஒடுங்குகின்ற மாயை என்று சிலரும்.
- ஐம்பொறிகளும் அவற்றின் புலன் நுகர்வுகளும் அற்ற இடமே என்று சிலரும்.
- அந்தக்கரணம் முடியும் இடம் என்று சிலரும்.
- முக்குணங்கள் அடங்கும் இடமே என்று சிலரும்.
- நாத வடிவே என்று சிலரும்.
- விந்துவே என்று சிலரும்.
- இவற்றுக்கு நடுநாயகமாய் விளங்கும் ஆன்மா என்று சிலரும்.
- உருவம் உள்ளது என்று சிலரும்.
- உருவம் அற்றது என்று சிலரும்.
- தற்போதம் அழிந்த இடம் என்ற சிலரும்.
- திருவருளே என்று சிலரும்.
- தொடக்கமும் முடிவும் இல்லாத வெட்டவெளியே என்று சிலரும்.
- வேறு பலவிதமாகக் கூறும் பலரும் இருக்கின்றனர்.

இதன் காரணமாக மனம் சிந்திய பாதரசம் போல சலனப்படுமே அல்லாது பேரானந்த நிட்டைகூட முடியுமோ?

முதற்பொருள் எது என்று தெரியாமல் புரியாமல் உணராமல் தவிக்கிறார் தாயுமானவர். தாயுமானவர் மட்டுமல்ல மானுடமே - கடவுள் எது? முதற்பொருள் எது? தெரியாமல் புரியாமல் உள்ளது.

தாயுமானவரைப் போலவே தெய்வத்தை மானுடம் தேடிக்கொண்டுதான் இருக்கிறது என்கிறது வேதாத்திரியம்.

"தெய்வத்தை நாடுவதும். தெளிந் தறிவில் தேறுவதும்,
  திருநிலையாம் மனிதனவன் பிறவிநோக்கம், பயனாம்.
தெய்வநிலை தெரிந்து கொண்டேன். திருவருளே நானாகத்
  திகழும்அனுபவம் எனக்கு இல்லை என்பர் சில்லோர்.
தெய்வமெனும் பாலைப் பிறைஇட்டுத் தயிராக்கிப் பின்
  தேடுகிறார் பாலை! அதைக் காணேன் என்றால் மயக்கே!
தெய்வம் உயிர்க்குள் அறிவாய், அதன் படர்க்கையிலே
  திழ்கிறது மனமாக! தேடுவது எதை? எங்கே?" (ஞாக.பா.1696)

உண்மையில் கடவுள் என்பது என்ன? விடைதருகிறார் அருள்தந்தை வேதாத்திரி மகரிசி.

- இறைநிலை, கடவுள், பரம்பொருள், கடவுள் துகள், இறைதுகள், கும் இருட்டு, சுத்தவெளி, வெட்டவெளி இதுவே கடவுள். கடவுள் என்பது ஜடபொருள். கடவுளை வெட்டவெளியாக வணங்க வேண்டும்.
- கடவுளுக்கு உருவம் என்பது இல்லை. அது ஒரு இறைதுகள். மனித உடம்பினுள் இருக்கும் உயிர் இறைதுகளால் ஆனது. மனிதனே கடவுள். மனிதன் கடவுளாக மாறலாம் என்பதை உணர்த்துவதற்காக உருவமாக சித்தர்கள் வழிபட்டனர்.

- சுத்தவெளி தான் இறைநிலை. இதுவே தான் கடவுள் ஆகும். இறைநிலையானது எல்லாம் வல்ல பூரணப் பொருள். இதன் இயல்பான தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும்ஆற்றலால் அதற்குள்ளாகவே செறிவு ஏற்பட்டு மடிப்புகள் விழுந்து, அதன் சூழ்ந்தழுத்தும் ஆற்றலாலேயே மிக விரைவான தற்சுழற்சி பெற்ற நுண்துகள்கள்தான் முதல்நிலை விண் எனும் பரமாணு.

- இந்த நுண்ணணுக்களின் கூட்டங்களே பேரியக்க மண்டலத்தில் காணும் அனைத்துத் தோற்றங்களும் ஆகும். முதல் நிலை விண்களின் விரைவான தற்சுழற்சியானது அதைச் சுற்றியுள்ள தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலான இறைவெளியோடு உரசும்போது எழுகின்ற நுண் அலைகள் தாம் காந்தம் எனும் நிழல் விண்கள்.

- நிழல் விண்கள் இறைவெளியின் சூழ்ந்தழுத்தத்தைத் தாங்க முடியாமல் கரைந்து போகும் நிகழ்ச்சிகள் தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்பனவாகும்.

- இறைவெளியானது முதல் விண், நிழல் விண், காந்தம், காந்தத் தன்மாற்ற நிலைகளான அழுத்தம் முதல் மனம் வரையிலான ஆறுவகை, இவற்றை மனதில் பதிய வைத்துக் கொண்டு பிரபஞ்சத்தை எண்ணிப் பார்த்தால், ஆராய்ந்தால் பேரியக்க மண்டலத் தோற்றம், இயக்கம், விளைவுகள் அனைத்தும் விளங்கிவிடும்.

- பரமாணு முதல் கொண்டு எந்தப் பொருளும் இறைநிலையாகவே இருக்கும்காட்சி அறிவிற்கு உண்டாகும். எல்லா இடங்களிலும் இறைநிலையாகவே இருக்கும் காட்சி அறிவிற்கு உண்டாகும்.

- எல்லா இடங்களிலும், எக்காலத்திலும் எல்லாப் பொருட்களிலும் இறைநிலையை உணரக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம் எனப்படுகின்றது என்பது வேதாத்திரியம்.

“சுத்தவெளி தெய்வம் என்ற உண்மை மறந்திட்டு,

சூதாட்டமாய் உருவச் சிலைகளையே காட்டி,

அத்துவிதம் எட்டினிலே. அனைத்து செயல் குற்றங்கள்

அனைத்துலகும் இச்சேற்றில் ஆழ்ந்து கிடப்பதனால்

உத்தமமாம் உயர்அறிவு ஒளிவிடுவதில்லை. அதனால்

ஒருவர் பிறர் வாழ்வின்வளம் பறித்து வாழலாச்சு!

வித்தையில்லை! விளக்கமிது....” (ஞாக.பா.1348)

சுத்தவெளி ஒரு பேராற்றல்

நாம் எங்கே வாழ்கிறோம்?

பூமி, உருண்டை என்ற உலகின் மீது. இந்த பூவுலகின் எடை என்ன இருக்கும்? பல கோடி டன்கள் இருக்கலாம் அல்லவா?

இதே உலகம் ஆண்டுக்கு ஒரு முறை சூரியனை வலம் வந்து கொண்டிருக்கிறது. இந்த சூரியனின் எடை எவ்வளவு இருக்கும்?

பூமியைவிட சூரியன் 3.33 லட்சம் தடவை எடை அதிகமாக உள்ளது. இப்பொழுது யூகிப்போம். சூரியனும், பூமியும் சேர்ந்தால் மொத்த எடை எவ்வளவு இருக்கும்?

நம்மால் சாதாரணமாக கணக்கிடவே முடியாது. எனினும், நமது யூகத்தால் ஓரளவு அனுமானம் கொள்ளலாம். சூரியனும், பூமியும் சேர்ந்து கணக்கிலடங்காத கோடி கோடி டன்கள் எடை இருக்கும் என்று நம்பலாம்.

அடுத்தபடியாக, சூரியனும், பூமியும் எங்கே இருக்கின்றன? இரண்டு கோள்களுமே சுத்தவெளியில்தான் லேசாக மிதந்து, உருண்டு ஓடிக் கொண்டிருக்கின்றன.

இது மறுக்க முடியாத உண்மை. இப்பொழுது சிந்திப்போம். ஒரு பொருள் மீது இன்னொரு பொருள் மிதக்கிறது என்று சொன்னால் எந்தப் பொருள் வலிதாக இருக்கும்?

மிதக்கும் பொருளைவிட தாங்கும் பொருள்தான் வல்லமை உடையாதாக இருக்க வேண்டும்.

இந்த கருத்தை மனதால் கணித்துப் பார்த்தோமானால் சூரியன், பூமி இரண்டைவிட சுத்தவெளி அதிக வல்லமை உடையதுதான் என்று ஐயமின்றி விளங்கிக் கொள்வோம்.

இதனால், சுத்தவெளி எந்த ஆற்றலும் இல்லாத ஒரு வெற்றிடம். அல்லது சூன்யம் என்ற கருத்து மாறிவிடுகிறது.

நமக்குத் தெரிந்த சூரியக் குடும்பத்தையும் மேலும் ஆகாய வெளியில் உலவும் கோடிக்கணக்கான சூரியக் குடும்பங்களையும் லேசாகத் தாங்கிக் கொண்டிருக்கும் சுத்தவெளியின் பேராற்றலும் அதன் வல்லமையும் இணையற்றது என்று விளங்கிக்கொள்கிறோம். என்று விளக்குகிறது வேதாத்திரியம்.

இப்பொழுது தாயுமானவரின் வினாவிற்கு விடை கிடைத்துவிட்டது. தெளிவு பெற்றுவிட்டோம். தெளிவே ஞானம் என்கிறது வேதாத்திரியம்.

"இறைநிலையே சுத்தவெளி.
  இருப்பு நிலையென்ப திது.
    இது அறிவாம். "நான்" "நீ" ஆகும்!
மறைபொருளாம் இருப்புநிலை
  மலர்ந்து, அலைநிலைகளாய்
    மாறியதே விண்முதல் பிரபஞ்சம் ஆம்!
நிறைநிலையே நுண்பகுதி.
  நிலையில்லா அலையாகி,
    நீள்படர்க்கையில் உணர்வாய், உயிர்களாச்சு!"
கறைபோன்ற தன்முனைப்பில்,
  கர்மங்கள் பதிவேற்று
கலங்கி வருந்திக் கண்ட,
    தெளிவே ஞானம்!" (ஞாக.பா.1700)

சுத்தவெளி என்ற பெருவெளியே தெய்வம் என்று உணர்ந்து கொண்டோம். புரிந்து கொண்டோம். சுத்தவெளியோடு இமைப்பொழுதம் நீங்காமல் நட்பு கொண்டு ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

வினைத்தூய்மை மனத்தூய்மை ஒன்றை ஒன்று உயர்த்தும்

"தவம்", "அறம்" என்ற இரண்டு வழிகள் தான் மனிதனை உய்விப்பதர்கான வழி என்பது திருமந்திரத்தின் வாக்கு

"திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி

இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைக்கும் தனக்கும் அக்கேடில் புகழோன்
விளைக்கும் தவம் அறம் மேற்றுணை யாமே" (திருமந்திரம்)

"திளைக்கும் வினைக்கடல் என்றால் என்ன? ஒவ்வொருவரும் வினைக் கடலாகத்தான் இருக்கிறோம். இதுவரை செய்த செயலின் தொகுப்பே மனிதன்.

தீயவினைப் பதிவுகள் அவ்வப்போது வாழ்வில் துன்பங்களை உண்டு பண்ணிக் கொண்டே இருக்கின்றன.

ஆகவே, இந்தக் கடலைக் கடப்பதற்காகவே வாழ்க்கை என்ற தோணியில் போய்க் கொண்டுள்ளோம். ஆனால் அதைக் கடக்க முடியாமல் சோர்வுறுகிறோம்.

கிளைக்கும் என்றால் இவனுக்குப் பின்னால் வரும் சந்ததிகளுக்கும் என்று எடுத்துக் கொள்ளவேண்டும். நமது சந்ததியினரும் கூட நன்மையே பெற வேண்டுமானால் தவமும், அறமும் வேண்டும்.

தவம் என்றால் இறைநிலை உணருவதற்காகச் செய்யக் கூடிய அகத்தவப் பயிற்சி (Simplified Kundalini Yoga). அதாவது உளப்பயிற்சி (Meditation). அறம் என்றால் முயற்சியையும், செயல்களையும் தனக்கும் பிறர்க்கும் எக்காலத்திற்கும் துன்பமின்றி நலமே விளைப்பனவாக மாற்றும் பயிற்சி.

ஆகவே "தவம்", "அறம்" என்ற இரண்டு வழிகள் தான் மனிதனை உய்விப்பதர்கான வழி என்பது திருமூலர் வாக்கு."

தன்னிடம் உள்ள வினைகளை களையவேண்டும் என்று இப்பாடலில் தாயுமானவர் இறைவனை வேண்டுகிறார். எப்படி?

அந்தகா ரத்தை ஓர் அகம் ஆக்கி மின்போல்என்
அறிவைச் சுருக்கினவர் ஆர்?
அவ்வறிவு தானுமே பற்றினது பற்றாய்
அழுந்தவும் தலைமீதிலே

சொந்தமா ய் எழுதப் படித்து ஆர் மெய்ஞ்ஞான
சுகநிஷ்டை சேராமலே,
சோற்றுத் துருத்தியைச் சதமெனவும் உண்டுண்டு
தூங்க வைத்தவர் ஆர்கொலோ?

தந்தைதாய் முதலான அகிலப்ர பஞ்சம்
தனைத்தந்தது எனது ஆசையோ?
தன்னையே நோவனொ! பிறரையே நோவனோ!
தற்காலம் அதைநோவனோ!

பந்தம்ஆனதுதந்த வினையையே நோவனோ!
பரமார்த்தம் ஏதும் அறியேன்
பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே." (தா.பா.10)

- அறியாமை என்ற ஆணவமலம் ஆகிய இருளை இருப்பிடம் ஆக்கி, மின்னல் கொடிபோல் எனது அறிவைச் சிறுக்கச் செய்தவர் யார்?
- அந்தச் சிறிய அளவிலான அறிவும், தான் பற்றி நிற்கும் உலகப் பற்றினுள் மூழ்கும்படி செய்ய பிரம்மா எழுதிய தலை எழுத்தை உரிமையோடு வாசித்துப் பார்த்தது யார்?

- மெய்ஞ்ஞானத்தால் சமாதி நிலை அடையாதபடி, சோற்றை அடைத்து வைக்கும் பைபோல் விளங்கும் உடம்பை நிலை என்று எண்ணி, மேலும் மேலும் உணவு உண்ணமாறு செய்து, உறங்க வைத்தவர் யார்?
- தந்தை, தாய் முதலாக தோற்றத்துக்கு வந்துள்ள உலகம் முழுவதையும், தந்து நின்றது, எனது ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளவோ?
- இதற்காக நான், என்னையே நொந்து கொள்வதா?
- அல்லது பிறரை நொந்து கொள்வதா?
- நிகழ்காலத்தை நொந்து கொள்வதா?
- பற்றுக்களை உண்டாக்கும் வினையை நொந்து கொள்வதா?

இதற்குரிய மேலான விளக்கம் எதனையும் அறியாதவனாயிருக்கிறேன் என்று வேதனைப்படுகிறார் தாயுமானவர்.

மனிதன் பதிவுகளைத் தூக்கிகொண்டு சுமக்கிறான். தனக்கு துன்பம் வரும்போது மட்டும் யாரை நொந்து கொள்வது என்று வேதனைப்படுகின்றார்.

தாயுமானவரும் இதைத்தான் சொல்கிறார். பதிவுகளை போக்கிவிட்டால் யாரையும் நொந்து கொள்ள வேண்டியதில்லை என்பது வேதாத்திரியம்.

தாயுமானவர் கேட்ட மேலான விளக்கத்தை வேதாத்திரியம் தருகிறது. (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

“வினைஎதுவும் நலம் தீது என்பது இல்லை
விளைவும் அதனை ஆற்றுபவர் நோக்கம் கொண்டே
வினையதனை நலம்தீது எனப் பிரிப்போம்.
விழிப்புடனே எண்ணம் எழும்போதே தேர்வோம்.

வினை, காலம், இடம், தொடர்புப் பொருளுக்கு ஏற்ப
வெவ்வேறு அளவு இன்ப துன்பம் நல்கும்.
வினைகள் தமை உடல்தகுதி, உலகம் ஒப்ப,
உயர்இயற்கை நியதி ஒக்க ஆற்றமேலாம்." (ஞாக.பா.1285)

இயற்கை என்ற பேராற்றலானது, பல நீண்ட காலமாக, மிகவும் நுட்பமாகத் தனது வயிற்றில் வைத்து. மனித உடலை பல லட்சம் தலைமுறைகளாக வடிவமைத்து அளித்துள்ளது.

அகக் கருவிகள் ஐந்து, செயல்கருவிகள் ஐந்து ஆகிய பத்துக் கருவிகள் மூலம் உடல் இயங்குகின்றது.

தேவைக்கேற்ற மலர்ச்சி, சூழ்நிலைக்கேற்ற மாற்றம் என்ற வகையில் இயற்கையின் தன்மாற்றத்தால் உடல் கிடைத்துள்ளது என்ற உண்மையைத் தன் முனைப்பின் காரணமாக மனிதன் மறந்து விடுகிறான்.

அந்த பேராற்றலுடைய இயற்கையே தன்னுள் இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது என்ற உண்மைகளையும் மறந்து விடுகிறான்.

புலன்களின் துய்ப்பில் இன்பம் இருப்பதாகக் கருதி மயக்க நிலையில் மேலும் மேலும் இன்பம் வேண்டி எந்த உறுப்பைப் பயன்படுத்தி துய்த்துக் கெடுத்தாலும், மனிதனுக்குள் இருக்கிற இயற்கை அவனுக்குப் பாடம் கற்றுத் தருவதற்காக, அந்த உறுப்பின் அணு அடுக்குகளை சீர்குலைத்து துன்பத்தை ஏற்படுத்தி நோய் என்ற விளைவையும் கொடுக்கிறது என்ற உண்மைகளை அறிவோமாக.

செயலுக்குத் தக்க விளைவு என்பதே இறைநீதியாகும். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"வினைத்தூய்மை பெறவேண்டின், மனத்தின் தூய்மை
வேண்டுவது இன்றியமை யாததாகும்.
வினைத்தூய்மை ஒழுக்கமுடன் கடமை, ஈகை,

விளங்கும் அறநெறி நிற்க விரைந்து ஓங்கும்.
வினைத்தூய்மை வித்தான மனத்தின் தூய்மை
விண்ணுணரும் அகத்தவத்தால் ஓங்கும் உய்ய.
வினைத்தூய்மை மனத்தூய்மை ஒன்றை ஒன்று
உயர்த்தி மனிதன் தெய்வமறியச் செய்யும்." (ஞாக.பா.1285)

வினை என்பது கர்மா அல்லது செயல் ஆகும். செயல்களில் நன்மையானது தீமையானது என்பது எல்லாம் இல்லை.

செயலின் மூலமாக ஏற்படும் விளைவு செயலாற்றுபவரின் நோக்கம் ஆகியவற்றைக் கொண்டே, நன்மையானது அல்லது தீமையானது என்று பிரித்துக் கூறுகிறோம்.

எண்ணம்தான் செயலாக மலர்ச்சி பெறுகிறது. செயலுக்கு முன் நிலையாகிய எண்ணம் எழும் போதே விளைவைத் தெரிந்து விழிப்புடன் செயல்படுவோம்.

செயல், செயலுக்குரிய காலம், செயலுக்குரிய இடம், செயலால் தொடர்பு கொள்ளும் பொருள் ஆகியவற்றிற்கு ஏற்றபடி வெவ்வேறு அளவுகளில் இன்பம் துன்பம் வெளிப்படும்.

உடல் ஆற்றலின் தகுதியோடு, உலக மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், இயற்கை நியதிக்கு உட்பட்டு செயல்களைச் செய்தால் அச்செயல்கள் எல்லாம் உயர்வானவையாகும். சரி.

வினைப் பதிவுகளை கழிப்பது எப்படி? விடையாக மீண்டும் வருகிறது வேதாத்திரியம் ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.

"தவமுறையும் அறநெறியும் பற்றப் பற்றத் தருக்கென்ற

தருக்கென்ற தன்முனைப்புக் குன்றிப் போகும்.

பவவினைக்ள புதிது எழா. முன்னம் செய்த

பதிவுகளும் மறைந்து மெய்ப்பொருள் காணும்.

சிவநிலையை சீவனிலே உணர்ந்து கொண்டால்,

சிறுமைதரும் மனமயக்க மாயை ஏது?

எவரெனினும் இவ்வழியால் அன்றி உய்ய

ஏதுவழி வேறுலகில்? எண்ணிப் பாரீர்!" (ஞாக.பா.1578)

தவத்தையும் அறநெறியையும் பற்றி வாழ்ந்தால் வினைப்பதிவுகளை போக்கிவிடலாம்.

"வினைபோகமே தேகம் கண்டாய்" என்பதை உணர்ந்து, நாமும் தவத்தையும் அறநெறியையும் இருகண்களாகப் போற்றி ஆனந்தமாக வாழ்வோமாக.

மேலான நிலையைப் பற்றி நிற்க அருள் புரிவாயாக?

யோகம் என்பது சித்தத்தில் எழும் விருத்திகளை அடக்குதல் என்று பதஞ்சலி முனிவர் சொல்கிறார்.

சித்த விருத்திகள் என்பவை சித்தத்தின் இயக்கங்கள் என்கிறார் பாரதியார். அதாவது மனம், அறிவு, சித்தம், அகங்காரம் ஆகியவை அடங்கிய உட்கருவி என்கிறார் பாரதியார்.

இவையனைத்தையும் சேர்த்துச் சித்தம் எனச் சொல்வது யோக சாஸ்திர வழக்கு என்று சொல்லும் பாரதியார், சித்தத்தின் இயக்கங்களை நிறுத்துதலே யோகம் என விளக்கமளிக்கிறார்.

யோக வாழ்வில் சாதனை மார்க்கத்தில் உயர்ந்திருக்கும் தாயுமானவர், தனக்கு மாறுபட்ட எண்ணம் எதுவும் உண்டாகாமல் தடுத்து எதனையும் அறியாது, இடைவிடாது மேலான நிலையைப் பற்றி நிற்க வேண்டுகிறார்.

வாராது எலாம் ஒழிய வருவன வெலாம் எய்த
    மனது சாட் சியது ஆகவே
  மருவநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த
    மரபு சமரசம் ஆகவே

பூராய மாய் உணர ஊகம் அது தந்ததும்.
    பொய்யுடலை நிலைய அன்று எனப்
  போதநெறி தந்ததும் சாசுவத ஆனந்த
    போகமே வீடு என்னவே

நீராள மாய் உருக உள் அன்பு தந்ததும்
    நின்னது அருள் இன்னும் இன்னும்

நின்னையே துணைஎன்ற என்னையே காக்கஒரு
நினைவு சற் று உண்டாகிலோ,

பாராதி அறியாத மோனமே இடைவிடாப்
பற்றாக நிற்க அருள்வாய்.
பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.” (தா.பா.11)

- என்னிடத்தும் வரவேண்டாத பொருள்கள் ஒழியவும், வரவேண்டிய பொருள்கள் வந்து சேரவும்.
- மனம் சாட்சி மாத்திரமாய் நிற்கும் பொருத்தமான நிலையைத் தந்து அருளியதும்.
- வேதாந்தம் என்றும், சித்தாந்தும் என்றும், பெயரளவில் வேறுபட்டு இருந்தாலும் பொருள் அளவில் ஒன்றுதான் என்பதை முழுமையாக உணரும் நல்லறிவைத் தந்து அருளியதும்.
- பொய்யான உடலை மெய் என்று எண்ணாத ஞானநெறியைக் காட்டி அருளியதும்.
- நிலையான பேரின்பமே வீடுபேறு என்பதை உணருமாறு நீர்போல் உருகுமாறு உள்ளத்துக்கு அன்பினைத் தந்து அருளியதும் ஆகிய அனைத்தும், நினது திருவருளின் செயலே ஆகும்.

- மேலும் மேலும் நீயே துணை என்று எண்ணி, என்னையே நான் காத்துக் கொள்ளவும்.
- இடையில் சற்றே மாறுபட்ட எண்ணம் எதுவும் உண்டாகாமல் தடுத்து, இவ்வுலக வாழ்வு எதனையும் அறியாது, இடைவிடாது மேலான நிலையைப் பற்றி நிற்க அருள் புரிவாயாக? என்று வேண்டுகிறார் இப்பாடலில் தாயுமானவர்.

யோக வாழ்வில் சாதனை மார்க்கத்தில் உயர்ந்திருக்கும் தாயுமானவர் தனக்கு மாறுபட்ட எண்ணம் எதுவும் உண்டாகாமல் தடுத்து எதனையும் அறியாது, இடைவிடாது மேலான நிலையைப் பற்றி நிற்க வேண்டுகிறார்.

அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று வழி காட்டுகிறது வேதாத்திரியம். நம் எண்ணங்கள் எல்லாம் நற்பயனாக மாறவேண்டும் என்று வலியுறுத்துகிறது வேதாத்திரியம். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

எண்ணத்தை எண்ணத்தால் எண்ணி எண்ணி
எண்ணத்தின் இருப்பிடமும் இயல்பும் கண்டு
எண்ணத்தை எண்ணத்தில் நிலைக்கச் செய்தால்
எண்ணமே பழக்கத்தால் தெளிந்து போகும்
எண்ணமது எழும்போதே இது ஏன் என்று
எண்ணத்தால் ஆராய்ந்தால் சுலபமாக
எண்ணத்தின் காரணமும் விளைவும் காணும்
எழும் எண்ணம் யாவும் நற்பயனாய் மாறும்" (ஞாக.பா.1529)

வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்தல் ஆகும். இயற்கையில் எல்லாமே இனிமைதான்.

பல பிறவிகளில் ஏற்பட்டுள்ள பழக்கப் பதிவுகளே எண்ணமாக, சொல்லாக, செயலாக மலர்ச்சி பெற்று விளைவாக இன்பமாகவோ துன்பமாகவோ மனிதன் அனுபவிக்கிறான்.

எண்ணம் என்பதை எண்ணத்தைக் கொண்டு சிந்தித்து சிந்தித்து அதனுடைய இருப்பிடத்தையும் இயல்பையும் கண்டுகொள்ள வேண்டும்.

எண்ணத்தை எண்ணத்தில் நிலைக்கச் செய்யும் பழக்கத்தின் மூலம் எண்ணத்தைப் பற்றிய தெளிவு உண்டாகும்.

எண்ணம் எழுகின்றபோது, இந்த எண்ணம் ஏன் வந்தது? என்று சிந்தித்து ஆராய்ந்தால், காரணமும் விளைவும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஏன்? என்று சிநதித்தால் காரணம் தெரிய வந்துவிடும். எதற்காக? என்று சித்தித்தால் விளைவு தெரிந்துவிடும். காரணமும் விளைவும் அறிந்து செயல்படுத்தும் போது எழுகின்ற எண்ணங்கள் அனைத்தும் நல்ல பயன்களையே நல்கும்.

யோக வாழ்வில் சாதனை மார்க்கத்தில் உயர்ந்திருக்கும் நமக்கு மாறுபட்ட எண்ணம் எதுவும் உண்டாகாமல் தடுத்து விடும்.

இடைவிடாது மேலான நிலையைப் பற்றி நிற்க வேண்டும் என்று தாயுமானவர் வேண்டுகிறார்.

இதற்கு என்ன செய்ய வேண்டும்.? "ஓர்மை நிலை பயிற்சி" வேண்டும் என்கிறது வேதாத்திரியம். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"நினைப்பும் மறப்பும் அற்ற இருக்க நீ பழகிக்கொள், புலன்கள்
அனைத்தும் அடிமையாம். அமைதி கிட்டிடும் ஆங்கே
ஒன்றையும் நினையாது, உன்னையும் மறவாது,
நின்ற நிலையே அது. நீயறி, நினைவை நிறுத்தி," (ஞாக.பா.1486)

ஓர்மை நிலைப் பயிற்சியை பழக்கப்படுத்தி வழக்கப் படுத்திக் கொண்டால் நிறை நிலை தானாக வந்து விடும் மேலான நிலையை எப்போதும் பற்றி நிற்கலாம். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்.)

"இறைநிலையொடு எண்ணத்தைக் கலக்க விட்டு,
ஏற்படும் ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க,
நிறைநிலையே தானாக உணர்வ தாகும்.
நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கு மட்டும்,
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக் கொள்ள,
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்.
கறைநீ ங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்.
கரைந்துபோம் தன்முனைப்பு. காணும் தெய்வம்." (ஞாக.பா.1487)

இவ்வளவு எளிமையாக விளக்கம் கூறி நம்மை செம்மை படுத்திவிட்டார் மகரிஷி.

எல்லா யோக மார்க்கங்களும் முயற்சியை மையமாக தான் கொண்டுள்ளது.

நாமும் எதுவரை முயற்சி செய்ய வேண்டும் என்றால், இறைநிலையோடு எண்ணத்தை கலக்க விடும் வரை முயற்சி செய்தால் போதும்.

இதில் நம்மை முழுமையாக உணர்வு ரீதியாக நம்முடைய உணர்வை அகன்ற நிலைக்கு கொண்டு போகப்போக ஒரு கட்டத்தில் மனம் தானாக விரிய முடியாமல், விரிந்து செல்வதற்கு இடமும் இல்லாமல் ஒரு நிலைக்கு மனம் வரும்.

அப்போது அந்நிலையில் ஒரு அமைதி நிலை ஏற்படும்.
அந்நிலையில் மனம் விழிப்போடு நின்றால் அமைதியில் மனம் உறைந்து காணாமல் போகும்.

அமைதி என்பது கற்பிப்பது அல்ல, கற்பிக்கப் படுவதும் அல்ல.
உருவாக்குவதும் அல்ல, உருவாக்கப் படுவதும் அல்ல.

தானாய் தானே நிலை பெறுவதே அமைதி நிலை.
இது தான் மௌன நிலையம் ஆகும்.

இந்த நிலையை வார்த்தையால் விளக்கிச் சொல்லவே முடியாது.
அப்படி சொன்னால், அது பொய் தான்.
இங்கு தான் *தியானம்* என்று ஒன்று மலரவே ஆரம்பிக்கிறது.

இதற்கு முந்தைய நிலை வரை மனம் ஓர்மை படுவதற்கு ஒரு பயிற்சி முறை தானே தவிர, அவைகள் தியானமாக கருதுவது தவறு.

தியானம் என்பது ஒரு செயல் அல்ல. தானாக நிகழ்வது.
ஏன் விழிப்பாய் நிற்க வேண்டும்...???

இங்கு கூட நம்முடைய கர்ம வினை நம்முடைய உணர்வு தளத்தை தாக்குவதற்கு தயாராக இருக்கும்.

நம்மை அங்கேயே தங்க வைபதற்கு தன்னுடைய முழு முயற்சியோடு செயல்படும்.

அதனால், விழிப்போடு இருப்போமேயானால், இங்கு என்ன இருக்கிறது....???
முன்னால் உற்பத்தியான சுத்தவெளி என்ற நிலையைக் கடந்து,
நம்மால் உருவான எண்ணமற்ற, சூன்யமான அரூபமான எங்கும் முடிவில்லாத, உணர்வு தளம் வரும். அதுதான் சுத்தவெளி உணர்வு.

இந்த ஆகாய பெருவெளியில் வெறும் உணர்பவன் மற்றும் உணரப்படும் சூன்ய பெருவெளி மட்டுமே இருக்க முடியும்.

முதலில் நாம் உருவாக்கிய வெளி.
பிறகு அதுவே நமக்குள் தானாக மலர்ந்த ஒரு விஷயம்.
இது தானாக சித்தியான ஒரு நிலை.
அமைதி வந்துவிட்டால் தேடுதல் நின்று விடும்.

இந்த இடத்திற்கு வந்துவிட்டோமானால் சர்வ கல்பத்தை நெருங்கி விட்டோம் என்று பொருள்.

இந்நிலையில் நாம் இன்னும் ஆழ்ந்து நம்மை இழக்க தயாராகிவிட்டால் சர்விகல்ப நிலை.

இந்த உணர்வை உணர்வது யார்...???

எது....??? உடலா....??? இல்லை மனமா...??? உயிரா...??? தெரியாது.
ஆனால் உணர்வு மட்டும் இருக்கும்.

ஆக, நம்மால் உணரப்படும் அந்த எல்லையற்ற மௌனம், தெய்வீக வெளி, இந்நிலையில் தான் *நிறைநிலை* என்ற அடுத்த கட்டம் நிகழும்.

இந்த வார்த்தைகள் எல்லாம் மகரிஷி யோசித்து எழுதவில்லை.
அது (இறை) அவராக தன்னை வெளிப்படுத்தி வந்தவைகள் தான்.
இது தான் தற்செயல் இயக்கம்.

ஏனெனில், மகரிஷி என்ற ஒரு தனி மனிதன் அங்கு இல்லை.
செயல் மட்டுமே இருக்கிறது, செய்பவன் இல்லாமல் இருக்கிறது.

இது தான் *நிறைநிலையே தானாக உணர்வதாகும்*
உணரப்படும் பொருளும் காணாமல் போய்விட்டது. உணர்பவனும் காணாமல் போய்விட்டான்.

அதனால் தான்
நான் என்ற சிற்றறிவை நான் கடந்த போது
நான் நீயாய் கூர்தலறம் வந்தியல்பு அறிந்தேன் என்று கூறுகிறார் மகரிஷி.

ஆக, இயல்பில் அறிவதற்கு ஒன்றுமே இல்லை.
நான் உருவாகினதும் போய்விட்டது. என்னுள் உருவானதும் போய்விட்டது.
நான் நானாகவே நிற்கிறேன்.

அனால், பழைய நான் இல்லை.
கவனித்த நான் காணாமல் போய்விட்டேன்.

அப்போ இருப்பது என்னவென்றால் அது தான் *தான்*
(தானாய், சுயமாய், இறையாய்) என்ற முழுமை நிலை. அந்த முழுமை நிலையை நாமும் பயிற்சியாலும் முயற்சியாலும அடைந்து ஆனந்தமாக வாழ்வோமாக. வாழ்க வளமுடன்.

மனம் குவிய ஒரு தந்திரம்

பகவான் ரமணரிடம் அவரது சீடர்களுள் ஒருவர் ஒரு முறை, “பகவானே! மனம் தான் என் அனைத்து துன்பங்களுக்கும் காரணம். மனமே பிறவிக்கு வித்து, மனம் ஒழிந்தால் அதுவே முக்தி. இது எனக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால், எவ்வளவு முயற்சி செய்தாலும் மனம் சும்மா இருக்க மாட்டேன் என்றே சொல்கிறது. மனம் தானே அடங்க ஏதேனும் உபாயம் உண்டா என்று எனக்கு அருள வேண்டும்!” என்று கேட்டார்.

அது சரி... நாமும் கூட சில நிமிடங்கள் தியானம் செய்யலாம் என்று யோசித்து கண்களை மூடிக் கொண்டால், கோயிலுக்கு வெளியே விட்டு வைத்திருக்கும் செருப்பு பத்திரமாக இருக்குமா? என்று தானே நமது கவனம் செல்கிறது.

அதைப் போலவே அந்த சீடரும் ரமணரிடம் மனதை அடக்குவதற்கு ஒரு உபாயம் கேட்டார்.

ரமணர் சீடரின் கேள்விக்கு அன்று எந்த பதிலையும் சொல்லவில்லை. சில நாட்கள் சென்றன.

ரமணரின் அறையில் அணில் ஒன்று இரண்டு குட்டிகளை ஈன்றது. ஆனால் அம்மா அணிலை பூனை அடித்துக் கொன்று விட்டது. எனவே பகவான் அந்த அணில் குட்டிகளை ஒரு ஓலை பெட்டியில் வைத்து பாதுகாத்து வந்தார்.

சில நாட்களில் அணில்களுக்கு கால்கள் முளைத்து விட்டது. அங்குமிங்குமாக ஓடத் துவங்கின. பகவான் ஒன்றை பிடித்து பெட்டியில் அடைத்தால் மற்றொன்று வெளியே ஓடும்.

இவ்வாறே அன்று முழுவதும் நடந்தது. பகவானுக்கு அந்த சீடரும் உதவினார். அந்த சீடரை பார்த்து பகவான், “அதோ பார்த்தாயா! தன் அம்மாவை அடித்த பூனை தன்னையும் அடித்து விடும் என்ற பயம் இல்லாததால் இந்த அணில் வெளியே ஓட ஆசைப் படுகிறது. பூனை,

இது தான் பிரச்சனை என்று அறிந்து பயம் வந்து விட்டால் ஓடவே ஓடாது அல்லவா!

அதைப் போலத் தான் நம் மனமும். உலகம் உண்மை என்ற மயக்கத்தில் உள்ள மனம், உலக ஆசைகளின் பொருட்டு அங்குமிங்கும் அலைந்து கொண்டே இருக்கும்.

நாம் தான் சிறிது சிரமப்பட்டு அமைதியாக வைத்துப் பழக வேண்டும். இயக்கம் நம்முடையது அல்ல, உலகம் உண்மையல்ல என்று தெரிந்துக் கொண்டால் மனம் தானே அடங்கும். அதுவரை நாம் தான் முயற்சியால் மனதை கட்டுப்படுத்த வேண்டும்!" என்றார்.

அரிய செயல்கள் பலவற்றை நிகழ்த்தும் தேவரீருக்கு, வீணான என் மனம் அடங்க ஓர் உபாயம் கூறுவதில் என்ன சிரமம் இருக்கப் போகிறது? என்று வருந்துகிறார் தாயுமானவர். தாயுமானவரும் மனதை அடக்க வழி கேட்டு பிரார்த்தனை செய்கிறார்.

"ஆழ்ஆழி கரைஉன்றி நிற்கஇலையோ? கொடிய
ஆலம்அமுது ஆக இலையோ?
அக்கடலின் மீதுவட அனல்நிற்க இல்லையோ
அந்தரத்து அகில கோடி

தாழாமல் நிலைநிற்க இல்லையோ? மேருவும்
தனுவாக வளைய இல்லையோ?
சத்த மேகங்களும் வச்ரதர ஆனையில்
சஞ்சரித்திட இல்லையோ?

வாழாது வாழவே இராமன்அடி யால் சிலையும்
மடமங்கை ஆக இல்லையோ?
மணிமந்த்ரம் ஆதியால் வேண்டுசித்திகள் உலக
மார்கத்தில் வைக்க இலையோ?

பாழான என்மனம் குவிய ஒரு தந்திரம்
　　பண்ணுவது உனக்கு அருமையோ?
பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கம் அறநிறைகின்ற
　　பரிபூர ணானந்தமே.” (தா.பா.12)

- ஆழமான கடல் கரையின்றி தன் எல்லை அளவில் நிற்க வில்லையோ?
- கொடிய ஆலகால நஞ்சு அமுதம் ஆகவில்லையோ?
- கடல் நடுவில் வடவாமுகாக்கினி என்னும் தீ எழுந்து நிற்கவில்லையோ?
- கோடிக்கணக்கில் கோளங்கள் கீழே விழாமல் ஆகாயத்தில் இயங்கவில்லையோ?
- மேருமலை வில்லாக வளைவில்லையோ?
- ஏழு மேகங்களும் வஜ்ர ஆயுதம் ஏந்திய இந்திரனது ஆணைப்படி செயல்படவில்லையோ?
- மானுட உருவம் நீத்து, கல்உருவில் இருந்த அகலிகை, இராமனது பாதம் பட்டவுடன் இள மங்கையாக எழவில்லையோ?
- மந்திர சக்தியால் கட்டப்பட்ட பாதரசமணி முதலியன கொண்டு. செய்யும் பலவித சித்துகள் நிறைவேறுவது இல்லையோ?

அரிய செயல்கள் பலவற்றை நிகழ்த்தும் இறைநிலைக்கு, வீணான என் மனம் அடங்க ஓர் உபாயம் கூறுவதில் என்ன சிரமம் இருக்கப் போகிறது? என்று வருந்துகிறார் தாயுமானவர்.

மனதை அடக்க வேண்டும் என்று இரமணரும் தாயுமானவரும் சொல்கிறார்கள். ஆனால் எப்படி அடக்குவது என்று சொல்லவில்லையே?

மனம் அடங்க உபாயம் தருகிறது..பயிற்சி தருகிறது வேதாத்திரியம். எப்படி? மன அலைச்சுழலை குறைத்தால் மனம் அடங்கும்.

மனதை அடக்க நினைத்தால் அலையும்.
மனதை அறிய நினைத்தால் அடங்கும்."

புலன்களைக் கடந்து நின்று மனதை, மனதுக்கு அடித்தளமான காந்த ஆற்றலை, உணர்ந்து, அவ்வாற்றல் மீது மனம் செலுத்தச் செலுத்த, மனித மனம் வினாடிக்கு 14 சுழலுக்குக் கீழே இறங்கும்.

அப்படி நுண்ணிய அலைநிலைக்கு வரக்கூடிய மன நிலையைத் தான் ஆல்பா அலை, தீட்டா அலை மற்றும் டெல்டா அலை என (Alpha wave, Theta wave, Delta wave) மூன்றாக விஞ்ஞானிகள் பிரித்திருக்கிறார்கள்.

குண்டலினி யோகம் என்னும் உளப்பயிற்சி முறையில் நிலைக்க நிலைக்க, முதலில் வினாடிக்கு (8 முதல் 13 Cycle/second) என்னும் அமைதி நிலைக்கு மனம் வரும்.

மேலும் உடலைத் தாண்டி மனிதனுடைய அறிவு பேரியக்க மண்டல விரிவில் ஆராய்ச்சியோடு நிற்கும் போது, வினாடிக்கு 4 முதல் 7 Cycl e/Sceond வரையிலான தீட்டா அலை கிட்டும்.

இன்னும் இத்தகைய தியான முறையால் ஆழ்ந்து செல்லும் தகுதி பெறும் போது வினாடிக்கு (1 முதல் 3 Cycle/Second) வரையிலான டெல்டா என்ற நிலை கிட்டும். (ஞானக் களஞ்சியத்தில் தங்க நெற்கதிர் போன்ற பாடல்).

"மனமெனும் புதினமது சீவகாந்த அலைதான்

மனிதனிடம் புலனுணர்வில் அதுவிரைவு கொண்டு,

மனச்சுழலோ வினாடிக்குப் பதினாலு முதலாய்,

மாறிப்பல நிலைகளிலே நாற்பது வரைபோம்.

மனமதுவே அகத்தவ ஆக்கினை துரியம் இவற்றில்

இலைப்பின்றி எட்டுமுதல் பதின்மூன்று வரைஆம்.

மனம் சக்திகளம் நிற்க, நாலுமுதல் ஏழாம்.

மறைபொருளாம் சிவகளத்தில் ஒன்றுமுதல் மூன்றாம்." (ஞாக.1784)

மனித மனம் என்பது ஒரு பொருள் அல்ல. புதுமையான புதினப் பொருளான சீவகாந்த அலை ஆகும்.

உயிர்சக்தி உடலுக்குள் சுழலுபோது ஏற்படும் தள்ளல்-கொள்ளல்-சக்தியை சீவகாந்தம் என்கிறோம்.

உடல்கருவிகள் மூலமாக ஏற்படும் அனுபோக அனுபவ உணர்வுகளில், அதன் வேகமானது அதிகரிக்கின்றது.

இந்த மன அலைச்சுழலை குறைக்க ஆக்கினை துரியம் துரியாதீத தவம் மேற்கொண்டால் மனம் அடங்கிவிடும். சுத்தவெளியோடு ஒன்றி விடும்.

துரியாதீத தவத்தில் மனம் ஒடாது. புலன்கள் தன்னடக்கம் பெற்று அமைதி அடைந்து விடும். பிரம்மத்தை உணரும் நிலைக்கு ஈர்த்துச் செல்கிறது.

மனம் ஓடாத காரணத்தால் அதுவே தானாக, தானே அதுவாக இருப்பதால் துரியாதீத தவத்தில் உறக்கம் வருவதுபோல இருக்கும்.

அதுவே தவத்தில் உறக்கம், உறக்கம் என்றால் "குறட்டை விட்டு" உறங்குவது இல்லை. இதுவே "அரிதுயில்" என்றும் அழைக்கப்படுகிறது. இந்த உறக்கம் உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும் வலுவையும் அளிக்கிறது.

எனவே, நாள்தோறும் துரியாதீத தவமியற்றி மனதை அடக்கி புலன்களை வென்று ஆனந்தமாக வாழ்வாமாக. ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!!

ஆசைக்கோர் அளவில்லையா?

மனிதனின் ஆசைக்கு அளவே இல்லை. பற்றை விட வேண்டும் என்று சொல்ல வந்த வள்ளுவர் கூட பற்றுக பற்றற்றான் பற்றினை என்று கூறுகிறார்.

எல்லாவற்றையும் விடுங்கள் என்று சொல்லவந்த வள்ளுவர் பற்றற்றான் பற்றினை பற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்.

விட முடியவில்லை.

திருமூலர் ஒரு படி மேலே போகிறார். இறைவனை கூட அடைய ஆசைப் படாதீர்கள் என்கிறார்.

ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்

இறைவனை அடைய வேண்டும் என்பதும் ஆசை தானே. உள்ளதிற்குள் பெரிய ஆசை அது தான். பேராசை. இறைவனை அடைய வேண்டும் ஆசைப் படுபவன் எப்படி துறவி ஆக முடியும்...

"ஆசை அறுமின் கள் ஆசை அறுமின் கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப் பட ஆய் வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தம் ஆமே." (திருமந்திரம்)

எங்கே முடிகிறது? உலகம் எல்லாம் ஆளக் கிடைத்தாலும் அந்த கடல் மேலும் ஆதிக்கம் செலுத்த ஆசை வருகிறது.

குபேரன் அளவு சொத்து இருந்தாலும் ரசவாத வித்தை கற்று உலகில் உள்ள இரும்பை எல்லாம் தங்கமாக ஆசை வருகிறது.

எவ்வளவு நாள் வாழ்ந்தாலும் காயகல்பம் தேடி அலைகிறார்கள். கடைசியில் உண்பதுவும் உறங்குவதும் தவிர வேறு ஒன்றும் இங்கு நிகழ்வது இல்லை.

குழந்தையாக இருக்கும் போது பொம்மை, விளையாட்டு சாமான் என்று ஆசைப் படுகிறோம், அப்புறம் புது புது ஆடைகள், பேனா,

புத்தகம், என்று போகிறது ஆசை, வயது வரும் போது எதிர் பாலின் மேல் ஆசை, அப்புறம் வேலை, பணம், அதிகாரம், சொத்து, என்று ஆசைக் கொடி படர்கிறது,

பின் நல்ல உடல் ஆரோக்கியம், படுத்தால் தூக்கம், என்று ஆசையின் அளவு குறைகிறது.... நாள் ஆக ஆக இறைவன், சொர்க்கம் என்று ஆசை தடம் மாறுகிறது...இப்படி கிளை விட்டு கிளை தாவும் மனக் குரங்கு. இதில் எந்த ஆசை உயர்ந்தது எந்த ஆசை தாழ்ந்தது?

ஆனால் எந்த ஆசையும் இல்லாமல் இருக்க ஆசைப் படுகிறார் தாயுமானவர் இங்கே.

ஆசைக்கு ஓர் அளவில்லை அகிலமெல் லாம் கட்டி
ஆளினும் கடல் மீதிலே
ஆனைசெலவே நினைவர். அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்

நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்.
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாகவே இனும் காயகற்பம் தேடி
நெஞ்சுபுண் ஆவர். எல்லாம்

யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆகமுடியும்.
உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே
ஒன்றைவிட்டு ஒன்று பற்றிப்

பாசக் கடற்க்குளே வீழாமல் மனது அற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்.

பார்க்குமிட ம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே” (தா.பா.13)

இப்படி மண்ணுலகில் மனிதர்கள் ஆசையினால் படும் துன்பங்களைக் கண்ட தாயுமானவர் “தெய்வமே!” எனக்கு உள்ளதே போதும்.” நான் நான் “ என்னும் அகங்காரத்தினால் பாசக் கடலுக்குள் விழாமல் காப்பாற்றி, எனக்கு பரிசுத்த நிலையை அருள்வாய். “ என்று வேண்டுகிறார்.

ஆசைக்கு ஓர் அளவே கிடையாது. ஒரு மன்னன் இந்த உலகம் முழுவதையும் கட்டி ஆண்டால் கூட, அவன் மனம் கடல் மீதும் தனது அதிகாரத்தை செலுத்தவே விரும்பும்.

குபேரனுக்கு நிகராக பொன் வைத்து இருப்பவர்கள் கூட இன்னும் பொன் வேண்டும் என்னும் ஆசையில் ரசவாதம் செய்ய அலைவார்கள்.

இவ்வுலகில் வயதானவர்கள் மீண்டும் பழைய இளமையுடன் வாழ வேண்டும் என்ற ஆசையினால் காயகல்பம் என்னும் மருந்தினைத் தேடி அலைந்து வாங்கிச் சாப்பிட்டு நெஞ்சு புண்ணாகி வருந்துவார்கள்.

எல்லாவற்றையும் யோசிக்கும் போது அவர்கள் வாழ்நாள் முழுவதும் நெஞ்செரிச்சல் தீர சாப்பிடுவது உறங்குவது என்றே முடியும்.

பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கின்ற பரிபூரண ஆனந்தத் தெய்வமே!” எனக்கு உள்ளதே போதும்.” நான் நான் “ என்னும் அகங்காரத்தினால் ஒன்றை விட்டால் இன்னொரு ஆசை என்ற பாசக் கடலுக்குள் விழாமல் இருக்கும் பரிசுத்த நிலையை அருள்வாய்.“ என்று தாயுமானவர் வேண்டுகிறார்.

திருமூலர் சொன்னபடியோ தாயுமானவர் சொன்னபடியோ, வேதாத்திரியம் ஆசையை அறுக்கச் சொல்லவில்லை? ஆசையை சீரமைக்கச் சொல்கிறது. எப்படி?

வாயு வேகம், மனோ வேகம் என்று சொல்வார்கள். மனம் வெகுவேகமாக இயங்கக்கூடியது.

ஒரு நொடியில் பல நூறு ஆசைகளை உருவாக்கிக் கொள்ள முடியும். அவ்வளவு ஆசைகளையும் உடலைக் கொண்டுதானே நிறைவேற்ற வேண்டும்?

அதோடு அந்த ஆசைகளுக்குச் சமுதாய ஒப்புதல், இயற்கையின் ஒத்துழைப்பு ஆகியனவும் வேண்டும்.

ஆசைப்பட்டுக் கொண்டு இருப்பதனாலேயே நாளுக்கு நாள் மனம் தளர்ச்சி அடைந்து கொண்டே போகிறது; வாழ்க்கையில் வெற்றி கிட்டுவதில்லை.

விரக்தி, வெறுப்பு ஆகியவை உண்டாகின்றன. ஆசையைச் சீரமைத்துக் கொள்ளும்போது, மனம் மிகவும் இலேசாகி விடுகின்றது.

ஆயிரமாயிரம் ஆசைகளை உருவாக்கி, அடக்கி வைத்துக் கொண்டு, உள்பாரம் கொண்டிருந்த நிலைமாறி, அந்தப் பளு இல்லாததனால் மனம் அமைதியாக இருக்கும்.

ஆசையின் மறுமலர்ச்சியே அறுகுணங்கள். ஆசை தடைப்படும்போது அத்தடையை நீக்க எழும் ஆர்வமே சினம். ஆசையுள்ள பொருட்களைத் தனக்கு வேண்டுமெனவும் பிறர் கவராமலும் பாதுகாத்துக் கொள்ளும் செயலே கடும் பற்று.

ஆணுக்குப் பெண் மீதோ, பெண்ணுக்கு ஆண்மீதோ முறையற்ற விருப்பம் எழுவது அதுவே மோகம்.

ஆசை பொருள், செல்வாக்கு, புகழ் இவற்றின் மீது அழுந்தி, அதைக் கொண்டு மக்களை உயர்வாக அல்லது தாழ்வாகக் கருதுவது மதம்.

சினத்தை முடிக்க வலுவையும் வாய்ப்பையும் நாடி நிற்கும் ஆசைதான் வஞ்சம்.

பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகியன அறுகுணங்கள் எனப்படும்.

ஆசையின் இயல்பறிந்து, அதை நலம் விளைக்கத் தக்க வகையில் பண்படுத்தி-ஒழுங்குபடுத்தி விட்டால், அதுவே ஞானமாக மலரும்.

ஆசையைச் சீரமைப்பது எப்படி? ஒவ்வொருவருக்கும் முக்கியமான சில ஆசைகள் இருக்கலாம். சின்னஞ்சிறிய ஆசைகள் பலவும் வந்து போகும்.

இந்த ஆசைகள் தேவைதானா? நிறைவு செய்து கொள்ள வசதி இருக்கிறதா? தேவை இல்லாத ஆசை எழுந்து, அதை நிறைவு செய்தால் பல துன்பங்கள் வரும். எனவே, ‘தேவையில்லாத ஆசையை விட்டு விடுவேன்’ என்று எண்ணிச் சங்கல்பம் மேற்கொள்ள வேண்டும்.

மீண்டும் ஒரு முறை அதே ஆசை எழுமேயானால், முன்பே எடுத்து வைத்திருக்கும் முடிவும் கூடவே வந்து, அந்த ஆசை காலப்போக்கில் மறைந்து விடும்.

தேவையும் வசதியும் ஒருங்கே இருந்த போதிலும்கூடப் பின்விளைவு தீங்கு அளிக்குமெனில், அந்த ஆசையையும் விட்டு விட வேண்டியதுதான்.

ஆசையை நிறைவு செய்யாமல் வாழமுடியாது என்று கண்டால், இந்த இடத்தில் மற்றொரு வினாவைப் போட வேண்டும்.

எடுத்துக்காட்டாக அலுவலகம் செல்ல, காய்கறிக் கடைக்குச் செல்ல, பேருந்துக்காக நீண்ட நேரம் செலவழிப்பதைத் தவிர்க்க, இருசக்கர வாகனம் ஒன்று அவசியம் என்று கருதுகிறீர்கள் என்றால், அதை வாங்க வேண்டியதுதான்.

அதை வாங்கத் தேவையான அளவு பணம் இருக்குமேயானால் வாங்கலாம். இல்லையென்றால், அந்த ஆசையை ஆராய்ந்து சீரமைக்க வேண்டும்.

ஆசையை அடக்கினால் அடங்காது, உணர்ந்து ஆராய்ந்து அதனைப் பிறந்த இடத்திலேயே ஒடுங்கச் செய்ய வேண்டும்.

அதே சமயம் இருசக்கர வாகனம் வாங்கப் பணம் இல்லையே என்று, வட்டிக்குக் கடன் வாங்கி வாங்கினோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த வட்டியைக் கட்டும்போது தான் சுமை தெரியும்.

இருசக்கர வாகனம் வாங்கக் கொடுத்ததைவிட அதிகமாக வட்டி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அதனால் பயன் என்ன? என்று பார்த்தால் இருசக்கர வாகனம் வாங்கியபின் விளைந்தது பெரும்பாலும் தீமையேயாகும்.

எனவே, ஓர் ஆசையை நிறைவேற்றுவதற்கு முன் இந்த ஆசை தேவைதானா? நிறைவு செய்ய முடியுமா? முடியும் என்றால் பின் விளைவு எத்தகையது? என்று பட்டியலிட்டு அனைத்தும் சரியாக இருக்குமேயானால், ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

இதுவே நன்மை பயக்கும். நிறைவு செய்ய முடியாத நூறு ஆசைகளைக் குப்பையைப் போல மனத்தில் போட்டு வைத்துக் கொள்வதால் நன்மை இல்லை. மனஅமைதி போய் விடும்.

மனத்தில் உள்ள பலம் போய்விடும். செயல்திறன் குன்றிப் போகும். உடல் நலம் குன்றிப் போகும். நற்குணங்கள் போகும். எரிச்சலும், கோபமும் அடிக்கடி வரும். முகத்தில் தெளிவுபோய், சோகம் படிந்து விடும். மனம் கலகலப்பாக இருக்காது.

ஆசையை அடக்கினால், அது பிதுங்கிக் கொண்டு வெவ்வேறு துன்பங்களாக உருவாகும். ஆராய்ந்தால், பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும்.

ஆசை நிறை மனமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாகி வாழ்வின் இலட்சியமே நிறைவேறிய ஓர் உணர்வு உண்டாகும். எனவே, ஆசையைச் சீரமைப்போம்.

“இச்சை எழும்போதே காரணம் கண்டிடு.
இச்சை முடித்திடச் சூழ்நிலை பார்த்திடு.
இச்சை முடிந்தால் எழும்விளைவை யூகி.
இச்சை முறையாய் இயங்கும் அமதியிலே” (ஞாக.பா.1664)

நாமும் நமது ஆசைசைளைச் சீரமைத்து ஆனந்தமாக வாழ்வோமாக.

துணைநின்ற நூல்கள்

1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
8. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 – அருள்நிதி மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
9. பாரதியார் பாடல்கள், பாரதியார்
10. பட்டினத்தார் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை
11. உள்முகப் பயணம், ஜெ.வெண்ணிலா, இணையதள முகநூல் பக்கம்.